# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 17 சனிக்கிழமை (02-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:06


# பேச்சுக்குத் தாம் தயாரென புலிகள் அரசுக்கு அறிவிப்பு!

## 6 நாள்கள் கடலில் தத்தளித்த முல்லை. மீனவர்கள்

மட்டக்களப்பு,டிசெ.2

ஆறு நாள்களாகக் கடலில் தத்தளித்த முல்லைத்தீவைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் மட்டக்களப்பு கல்குடாப்பகுதி மீனவர்களால் நேற்றுக் காலை மீட்கப்பட்டனர்.

முல்லைத்தீவிலிருந்து கடந்த 26 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற வை.லிங்கராஜா (வயது 23), றொ. மரியசீலன் (வயது 32) ஆகிய இருவருமே கல்குடாக் கடற்பகுதியில் வைத்து மீட்கப்பட்டவர்கள் ஆவர்.

இந்த மீனவர்கள் இருவரும் செஞ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.2

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள ஆள்கள் இல்லாத வீடு ஒன்றில் கடந்த புதன்கிழமை படையினர் மேற்கொண்ட தேடுதலில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அந்த வீட்டிலிருந்து ஒரு ரி-56 ரகத் துப்பாக்கி, ஒரு ரி-81 ரகத் துப்பாக்கி, 8 கிரனேட்டுக்கள் மற்றும் வெடி பொருள்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் விமானப் படையின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயரத்னவுக்கு லண்டனிலிருந்து 'பக்ஸ்' செய்தி

கொழும்பு,டிசெம்பர்2

**இலங்கை அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தாம் தயாராகவிருப்பதாகத் தெரிவித்து விடுதலைப் புலிகள் 'பக்ஸ்' செய்தி ஒன்றை அமைச்சரும், பொது மக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளருமான டி.என்.ஜயரத்னவுக்கு அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

விடுதலைப்புலிகளின் லண்டன் அலுவலகத்தில் இருந்தே இந்தப் 'பக்ஸ்' செய்தி கிடைத்துள்ளதாக அரசசார்புச் செய்தி ஊடகம் தெரிவித்தது.

இந்த விடயத்தை ஊர்ஜிதம் செய்த சிரேஷ்ட அமைச்சரான மகிந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆயர் வன்னி செல்கிறார்

கொழும்பு சென்றுள்ள யாழ். ஆயர் அதி வண தோமஸ் சௌந்தரநாயகம் ஓரிரு தினங்களில் வன்னிக்குச் செல்லவிருக்கின்றார்.

சமாதான முயற்சிகளுக்கு உற்சாகமளிக்கும் வகையில் பலதரப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகக் கொழும்பு சென்றுள்ள ஆயர் வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதானத்துக்குத் தாம் விடுத்துள்ள அழைப்புத் தொடர்பான கடிதத்தை ஆயர் நேரடியாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கையளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## மாவீரர் தினத்தையொட்டி இன்று லண்டனில் விசேட நிகழ்வுகள்

### அன்ரன் பாலசிங்கமும் பங்குபற்றுவார்

லண்டன்,டிசெ.2

மாவீரர் தினத்தையொட்டிய விசேட நிகழ்வுகள் இன்று லண்டன் அரோனா மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று லண்டன் நேரப்படி பிற்பகல் 3 மணிமுதல் 10 மணிவரை இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சூழ்நிலையிலும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனில் தங்கியுள்ள நிலையிலும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் நேசக்கரத்தை நீட்டி உள்ளார்

## யுத்தநிறுத்தம் செய்து பேச்சுக்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

கொழும்பு,டிசெ.2

சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேசக்கரத்தை நீட்டியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும்.

ஐ.தே.கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் ஊடகவியலாளர் நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தவின் நியமனத்துக்கு ஐ.தே.க. கடும் கண்டனம்

கொழும்பு,டிசெ.2

ஜெனரல் அனுருத்த ரத்வத்த மீண்டும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டதை ஐ.தே.கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட எவருக்கும் அமைச்சர் பதவியோ, பிரதி அமைச்சர் பதவியோ வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தார்.

ஆனால் கண்டி மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அனுருத்த ரத்வத்தவுக்குத் தற்போது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இது ஜனாதிபதி தனது வாக்குறுதிகளை மீறியதற்குச் சமமாகும்

- இப்படி ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது. (இ-7)

## கப்பலில் பயணம் செய்ய இருந்தோரில் 500 பேர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

### யாழ். ரயில் நிலையத்தில் கட்டு மீறி செயற்பட்ட கூட்டத்தினர்

யாழ்ப்பாணம்,டிசெ.2

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு நேற்றுப் புறப்பட்ட லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்ய இருந்தவர்களில் சுமார் 500 பேர் கப்பலைத் தவறவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சுமார் 1250 பயணிகள் நேற்றைய லங்கா முடித்த கப்பலில் செல்வதற்குப் பயண அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தனர். இவர்களில் 350 பேர் பருத்தித்துறையிலிருந்தும் 900 பேர் யாழ்ப்பாணத்திலிருந்தும் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து செல்ல இருந்தோரிலேயே 500 பேர் வரை கப்பலைத் தவறவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பும் நிலைமை ஏற்பட்டது.

யாழ்.ரயில் நிலையத்தில் பயணிகளும் அவர்களை வழியனுப்ப வந்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 125 நிலையங்களில் இன்று போலியோ சொட்டு மருந்து

யாழ்ப்பாணம்,டிசெ.2

போலியோ சொட்டுமருந்து வழங்கும் பணி இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்.குடாவில் 125 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

நேற்று கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட போலியோ சொட்டு மருந்து சகல நிலையங்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறியுடன் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி!

### மேலதிக பரிசோதனைக்காக இரத்தம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்குடாநாட்டில் டெங்குக் காய்சசல் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் காய்ச்சல் என அனுமதிக்கப்பட்ட ஒரு சிறுவனுக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் இந்தச் சிறுவன் காணப்படுவதால் இவருக்கு ஏற்பட்டிருப்பது டெங்குக் காய்ச்சலாக இருக்கலாம் என டாக்டர்கள் சந்தேகிக்கின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைதான இலங்கையர்களை நாடுகடத்த இத்தாலி முயற்சி

கட்டானியா,டிசெ.2

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழையமுற்பட்டு இத்தாலியப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என இத்தாலிய வெளி விவகார அமைச்சின் பேச்சா

(14ஆம் பக்கம் பார்க்க)


பெற்றோர்களே!

தவறாதீர்கள்!!

ஐந்து வயதுக்கு உட்பட்ட உங்கள் குழந்தைகளுக்கு இன்று போலியோ சொட்டு மருந்து கொடுக்கத் தவறாதீர்கள்!

போலியோ அரக்கனை உலகிலிருந்து அடியோடு ஒழிக்க ஒன்றிணைவோம்!

- யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்.


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 60ஆம் நாள் நினைவஞ்சலி

வடமாகாண தாச்சிச் சங்க மத்தியஸ்தர்

**அமரர் அ.தம்பிராசா**

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையை குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*- வடமாகாண தாச்சிச் சங்கம்.*

(81157)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் - 2001

2001ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீடையும், உத்தேச செலவீன விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தி. 252, 212) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இராசா தணிகாசலம்,
பதில் மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/14095)

## யாழ்ப்பாண மாநகரசபை

வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2001 க்கான திகதி நீடித்தல்

10.11.2000 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் குறிப்பிட்ட முடிவு திகதி 22.12.2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

இராசா தணிகாசலம்,
பதில் ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/14097)

## கலைத்தென்றல்

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் 19.11.2000 ஞாயிற்றுக்கிழமை நடத்தவிருந்த

***கலைத்தென்றல் விழா***

காலநிலை காரணமாகப் பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவிப்பதோடு, அவ்விழா 03-12-2000 அன்று பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது என்பதையும் எமது ஆதரவாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(C/14082)


# A/L DAY CLASS

ஆரம்பம் : 04.12.2000

MON. 8 am

- Acc. Mr.தவா. B.Com. (Hons) [Acc.Spl.]
- Com. Mr. பசில் B.B.A.
- Econ. பிரபல ஆசிரியர்
- Geo. Mr.கிரி
- Tamil. Mr.அருள்

SHAMROCK (C/14096)



# புலமைப்பரிசில் - 2001

16ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

| | | |
|---|---|---|
| வெ.ஜெயப்பிரசாந் யா.இ.அ.பா. | ~ | 179 |
| இ.கதுஷா | ~ | 172 |
| ந.திருத்தனிகன் யா.இ.அ.பா. | ~ | 170 |
| கு.லஜிதன் யா.இ.அ.பா. | ~ | 169 |
| அ.ஜதிகானந் | ~ | 167 |

அடுத்த பரீட்சை நாளை 03-12-2000

BOND - யாழ்.நகர்

(81146)



## லஷ்சுமி சினிமா

இணுவில்

மாதவன், ஷாலினி நடித்த

**அலைபாயுதே**

ரீல்ஸ்

காட்சிகள்: 10.30, 2.30 (ப.நேரம்)

(81154)



## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன், மணிவண்ணன்

மற்றும் பலரின் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட

*துள்ளாத மனமும் துள்ளும்*

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)



சாயிராம

# திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் கார்த்திகைத் திங்கள் 18 ஆம் நாள் (03.12.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிமுதல் 10.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

**தேவி அச்சகம்**

**DEVI PRINTERS**

என்னும் பதிப்பகத்தைப் புதிதாக ஆரம்பித்து வைக்கத் திருவருள் கைகூடி உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்
திரு.திருமதி ந.கணேசமூர்த்தி,
திரு.திருமதி சபா.தருமகுலசிங்கம்.
(காரைநகர்.)

*114/19, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*



27 ஆவது ஆண்டுகள்

# விக்னா கல்வி நிறுவனம்

O/L வகுப்புகளுக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்.

**புதிய கல்வியாண்டு 2001**

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை.

ஆரம்பம்:
9-12-2000 [9.00 a.m.]

- அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

(81092)


# திருமறைக் கலாமன்ற தினம்

**C.P.A. DAY - 2000**

எமது மன்ற தினம் நாளை (03.12.2000) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருப்பதனால் மன்ற அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| காலை | 10.30 | - | திருப்பலியும் ஒன்று கூடலும் (கலைத்தூது மண்டபம்) |
| மாலை | 4.00 | - | பொது நிகழ்வுகள் (மறைக்கல்வி நடுநிலையம்) |

**நிகழ்வுகள்**

'குடிலின் கானங்கள்' - ஒலி நாடா வெளியீடு
கலைஞர் கௌரவிப்பு
'சோழன் மகன்' நாட்டுக்கூத்து

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பொதுச் செயலாளர்,*
*திருமறைக் கலாமன்றம்.*

# 2000 A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு

# யுனிவக் நிறுவனம் இலவச/சலுகைக் கட்டணத்தில் கணனிப்பயிற்சி வழங்கவுள்ளது

சகல பிரிவிலும் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களில்

| | | | |
|---|---|---|---|
| RANG 1-50 | வரையான 200 மாணவர்களுக்கு | 100% | Scholarship |
| RANG 51-100 | வரையான 200 மாணவர்களுக்கு | 80% | Scholarship |
| RANG 101-150 | வரையான 200 மாணவர்களுக்கு | 75% | Scholarship |
| RANG 151-200 | வரையான 200 மாணவர்களுக்கு | 70% | Scholarship |
| RANG 201-250 | வரையான 200 மாணவர்களுக்கு | 65% | Scholarship |
| RANG 251-300 | வரையான 200 மாணவர்களுக்கு | 60% | Scholarship |
| RANG 301-400 | வரையான 400 மாணவர்களுக்கு | 55% | Scholarship |
| RANG 401-800 | வரையான 1600 மாணவர்களுக்கு | 50% | Scholarship |

சகல மாணவர்களும் 06.12.2K திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு, தாம் கற்க விரும்பும் பயிற்சி நெறியினைத் தெரிவுசெய்து கொள்ளவும். விரிவுரைகள் யாவும் 24.12.2K திகதி ஆரம்பமாகும்.

| பயிற்சி நெறிகள் | விசேட சலுகைகள் |
|---|---|
| DIPLOMA IN MICROSOFT OFFICE | கூடிய நேர செய்முறைப் பயிற்சி |
| DIPLOMA IN COMPUTER HARDWARE | INTER NET & E MAIL TRAINING |
| DIPLOMA IN ACCOUNTING SOFTWARE | MULTI MEDIA & GAMES |

# UNIVAC

College of Computer Information Technology

K.K.S. Road, Narchimar Kovil,
Kokuvil, Jaffna.

(81126)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சோமசுந்தரம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் தற்போது கொட்டடியை இருப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சோமசுந்தரம் நேற்று (01-12-2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமகளின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரி, பாலகிருஷ்ணன், விமலாதேவி, விஜயலட்சுமி,விஜயராணி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகராஜா (இலங்கை மி.ச.),நிர்மலா, ஜெயபிரபா, தயாபரன், நித்தியானந்தம், வதனி, சிவநாதன், சௌந்தர்ராஜன்(துர்க்கா நகைப் பூங்கா), ஸ்ரீஸ்கந்தராஜா(சன் ஸ்ரீ ஹாட்வெயார்ஸ் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதீஸ், றேகா, சகி, செந்தூரன், விதுசன், உஜாந்தன், பவதாரன், கலைவாணி, சிவதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2000) சனிக்கிழமை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கொட்டடி வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**ப.நாகராஜா** (இ.மி.ச.)

*31, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(81147)

## சின்னத்துரை முரளீதரன்

நீர்வேலி மத்தி நீர்வேலியைச் சேர்ந்த சின்னத்துரை முரளீதரன் நேற்று (01-12-2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா சின்னத்துரை(முன்னாள் லிகிதர், அத்தியார் இந்துக்கல்லூரி - நீர்வேலி) - சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பகீரதி (ஆசிரிய மாணவி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை), பகீரதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பிராசா கந்தசாமி (ஆசிரியர் - கொழும்பு) அவர்களின் அருமை மருமகனும், மகாலிங்கம், சண்முகநாதன், அமரர் பாலசிங்கம் ஆகியோரின் பெறாமகனும், அமரர் ச.தம்பிராசா மற்றும் இராசம்மா, அமரர்கள் சி.கந்தையா, வள்ளியம்மை ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்வேலி மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் நீர்வேலி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
க. சின்னத்துரை (தகப்பன்)

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

(81156)

யாழ்ப்பாணம்

# உதயன்

## தென்னிலங்கைச் சமாதான விரும்பிகள்

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கான முன்முயற்சிகள் தொடரக்கூடிய சாத்தியங்கள் தெரிகின்றன. நோர்வே நாட்டின் இந்த முயற்சிகளை மேற்கு நாடுகள் வரவேற்றுள்ளன; பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் சில நாடுகள் முழு அளவில் ஆதரவு வழங்க முன் வந்துள்ளன.

சமாதானப்பேச்சுக்களை முன்னெடுப்பதில் அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்புகளும் விருப்பமும் ஆர்வமும் காட்டும் வேளை இது. ஆனால் சமாதானப் பேச்சுக்களை விரும்பாத சக்திகளும் உள்ளன. அத்தகைய சக்திகள் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் விதண்டாவாதங்களை முன்வைக்கவே செய்யும்,

சிங்கள மக்களில் கணிசமானோர் சமாதானம் உருவாகுவதையே, அமைதி வருவதையே விரும்புகிறார்கள். ஆனால் கடுங்கோட்பாட்டாளர்களான ஒரு சில தரப்பினரும், சில அரசியல் வாதிகளும், போரை மூலதனமாக்கி உழைப்பவர்களும் அது நீடிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் சமாதான முன் முயற்சிகளை ஆதரிக்கவே செய்வர். கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தை நோக்கி காணாமற்போன படையினர் சங்கம் சமாதான ஊர்வலம் நடத்த இருப்பது அதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

சிஹல உறுமய போன்ற பேரினவாதக் கட்சிகளும் ஏனைய சில தரப்புகளும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தின. அவற்றை விஞ்சும் விதத்தில் சமாதானத்தை விரும்புவோரின் ஊர்வலங்கள் தெற்கில் நடைபெறவேண்டும். அப்போது தான் சிங்கள மக்களின் சமாதான விருப்பம் பிரதிபலிக்கப்படும்.

சமாதானத்தை விரும்புவதாகக் கூறியும், போர் நிறுத்தம் செய்யக் கோரியும் அறிக்கைகளை வெளியிடும் அமைப்புகள், நிறுவனங்கள் பல தெற்கில் உள்ளன. அவை வெறும் அறிக்கைகளோடு நிற்காமல், சமாதான ஊர்வலங்களை நடத்தி சமாதான எழுச்சியை அங்கு உண்டாக்கலாம்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான பிணக்கைத் தீர்த்துச் சமாதானத்தை உருவாக்குவதற்கு இதுவரை — கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக — மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயன்தரவில்லை. அதற்குப் பிரதான காரணம் சமாதானத்தைத் தாம் விரும்புவதாக— தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படுவதை தாம் ஆதரிப்பதாக — சிங்கள மக்கள் ஒருபோதும் வெளிப்படையாகப் பிரதிபலித்ததில்லை,

போரினால் தமிழ் மக்கள் தரப்பில் மட்டுமன்றி சிங்கள மக்கள் தரப்பிலும் உயிரிழப்புகள் உண்டாகின்றன. பொருளாதாரம் நலிவதால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது; வாழ்க்கை நிலை தாழ்ந்து போகிறது. அடிக்கடி பொருள்களின் விலை உயர்வுகள், வரிச் சுமைகள் வந்து வருத்துகின்றன.

இவற்றைப் போக்குவதற்குப் போரை நிறுத்த வேண்டும்; இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு— நீதியான தீர்வு காணப்பட வேண்டும். இவற்றை நாடிச் சிங்கள மக்கள் செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது. இல்லையேல் இந்த நாடு சீரழிவதைத் தடுக்க முடியாது.

# சமாதானத்துக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம்

# அதனை கைநழுவ விடவேண்டாம்!

## சந்திரிகாவுக்கும் பிரபாவுக்கும் யாழ். ஆயர் மகஜர்

கொழும்பு, டிசெ. 2

நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இனப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்குரிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனை நழுவவிடாது இரு தலைவர்களும் உறுதியுடன் செயற்பட்டு சமாதானத்தை அடைய வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர்களை யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனுடன் நோர்வேப் பிரதிநிதி பேச்சு நடத்தியதாக தொடர்புச் சாதனங்கள் ஊடாக அறிந்து மகிழ்ச்சி அடைந்தோம்.

புலிகள் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த நல்லெண்ண சமிக்ஞையை உரிய விதத்தில் பயன்படுத்தும்படி துன்பப்படும் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கவே இந்த மகஜரைத் தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

நீண்டகாலமாக நடைபெறும் கொடிய யுத்தத்தாலும் அதன் விளைவுகளாலும் மனம் சோர்வுற்று இருக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இந்தச் சந்திப்பு நிச்சயம் ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளது.

காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு முடிவு காணும் ஒரு முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டு நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த ஆணையும் இது என்றே நாம் கருதுகின்றோம். யாழ். மக்களின் நீண்ட கால ஆசையும் ஏக்கமும் கூட இதுவே ஆகும்.

இதனை இந்தத் தடவை தாங்கள் கட்டாயம் நிறைவு செய்வீர்கள்என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம்— என்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் மேகங்கள் சூழ, ஷெல் வீச்சுக்களின் சத்தங்கள் யாழ். நகரை அதிரவைக்கும் சூழலில் அச்சத்தோடும் பயத்தோடும் வாழும் யாழ். மக்களாகிய எமக்கு, உங்களுக்கும் நோர்வேப் பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு நம்பிக்கையின் ஒளிக்கீற்றாகத் தெரிகிறது.

நீண்டகாலமாகச் சோர்வுற்றிருக்கும் யாழ். மக்களுக்கும் பொருளாதாரத் தடையின் இறுக்கத்தினால் துன்புறும் வன்னி மக்களுக்கும் உங்களின் இந்தச் சந்திப்பு நிச்சயம் ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளது.

தமிழ்ப் பேசும் மக்களின் சொல்லொணாத் துயரைக் கண்டு நீங்கள் இப்போரை முடிவுக்குக் கொண்டுவரப் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்தது எமக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இதை முன்னெடுப்பதில் அரசின் பங்களிப்பு பெரிதாக இருந்தாலும், நீங்களும் சமாதானத்தின் பாதையை மன உறுதியுடன் பின்பற்றி அதற்கான நல்ல சமிக்ஞைகளைத் தோற்றுவித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நாம் அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

காலத்தை வீணடிக்காமல் அரசும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினைக் காண நேர்மையாக உழைக்க எம்மால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் கொடுப்போம் என உறுதி கூறுகிறோம்.

நீங்கள் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெற்று நிரந்தரமான தீர்வினைக் காண எமது எல்லா விதமான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தருவோம் என உறுதி கூறுகின்றோம்.

நீண்ட கால இடைவெளியின் பின் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தப் பேச்சுவார்த்தைக்கான அரிய சந்தர்ப்பத்தைக் கைநழுவவிடாது இறுதி வரையும் நம்பிக்கையுடன். தடைகளைக்கண்டு பின்வாங்காது செயற்படவும் முயற்சிகளில் முழுப் பயனைக் காணவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம் — என்றுள்ளது.

[இ-5]

## நிவாரணம் இறுதித் தினம்

அரியாலை, டிசெ. 2

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் விநியோக இறுதித் தினம் இன்று சனிக்கிழமை ஆகும்.

இதுவரை இந்தப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி சங்கத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் கேட்டுள்ளார். (இ-17)

## மாணவர் விவரம் பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 2

வெற்றிடம் நிரப்புப் பட்டியல் மூலம் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீடம் மற்றும் விவசாய பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கான முடிவு தினம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆகும். (ஐ-6)

## நாளை

கார்த்திகை 18

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 5-22 வரை.

நட்சத்திரம்: அவிட்டம்

முற்பகல் 7·45 வரை

சுபநேரம்: 9.15—10.45

ராகுகாலம்: 4.45- 6.15

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

கடந்த சனியன்று வெளியான ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களின் விவரங்கள் அதிபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு:-

**மகாஜனக் கல்லூரி**

★ வைத்தீஸ்வரன் சாரங்கன், கணேசதுரை தீபன், இராமச்சந்திரன் விக்னேஸ்வரன் (மூவருக்கும் 3A), கனகரத்தினம் ஜெயமலர் (3AC)

**சங்கானை சிவப்பிரகாச ம. வி.**

★ தெ. சர்மிளா (2ABC), தி. தீபா (AB2C). கோ. கிருஷ்ணகுமார் (ABS)

[ம-28]

## உதயனுக்கு

கல்வி என்பது தெரியாதனதைத் தெரியச் செய்வதல்ல, ஒழுக்கத்தை ஒழுகச் செய்வது.

—ரஸ்கின்—

## வரவேற்பு விழா

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு உபசார நிகழ்வு இன்று சனி காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது மண்டபத்தில் நடைபெறும்.

இரண்டாம் வருட மாணவர்களால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள இந்த நிகழ்வில் முகாமைத்துவம், வணிகம் ஆகிய கற்கை நெறிகளுக்கு 98 ஆம் 99 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வரவேற்கப்படவுள்ளனர். (இ-ம)

## வலுவிழந்தோர் தின விழா

வலிகாமம் வடக்கு பிரதேச சயலகம் நடத்தும் வலுவிழந்தோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவை நடைபெறவுள்ளன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் (இ-6-8-135)

## பயிலுநர் ஆசிரியர் சம்பளம் அடுத்த வருடம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, டிசெ. 2

அடுத்த வருடம் முதல் பயிலுநர் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பேராதனை ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயிலுநர் ஆசிரியர்கள் இன்று மாதாந்தம் பெறும் 2 ஆயிரத்து 500 ரூபா அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கே போதாது என்றும்— கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

## கூட்டணி பங்கு பற்றும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள இல்லத்தில் நடைபெறும். (இ-7)

## மட்டுவிலிலிருந்து வந்த முதியவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

மட்டுவில் பகுதியிலிருந்து நேற்று இருவர் யாழ். வந்து சேர்ந்தனர். மட்டுவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தையா (வயது 78), சரசாலை தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கதிரவேலு (வயது 75) ஆகியோரே யாழ். வந்து சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்கள் சரசாலை தெற்கைச் சேர்ந்த கதிரன் செல்லர், செல்லாச்சி, செல்லப்பிள்ளை ஆகியோரையும், மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு மற்றும் அவர்களுடன் உள்ள மூவரையும் தேடுவதாகத் தெரிவித்தனர்.

[இ-8]

## திருத்தம்

நேற்றைய உதயனின் 4ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த ''நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை - 2091'' என்ற விளம்பரத்தில் சி. பரராசசிங்கம், செயலாளர் என்று இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் தவறுதலாகச் செயலாளர் என்பது விடுபட்டுவிட்டது. ஆகவே சி. பரராசசிங்கம், செயலாளர் என்று திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## திரிபோஷா மா

கடந்த சில வருடங்களாகத் தடைப்பட்டிருந்த திரிபோஷா மா இந்துருவலி கப்பல் மூலம் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2 ஆயிரம் பொதிகள் அடங்கிய திரிபோஷாமாவை எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போஷாக்கு குறைந்த நிலையிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு இந்த திரிபோஷா மா வழங்கப்படவுள்ளது.

[இ-5]

## கலந்துரையாடல்

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் சகல பயிற்சி நெறி மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்றுகாலை 10.30 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் இராசையா ஸ்ரீரங்கநாதனின் விடுதலை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கே வி. குகேந்திரனுடன் கலந்துரையாடியது குறித்தும்—

யாழ். அரச அதிபரினால் மாணவர் ஒன்றியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் பற்றியும்— இறுதிப் பரீட்சை பற்றியும்—எடுத்துக் கூறப்படும் என பகல் நேர மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள மாணவனை விடுவிக்கக்கோரி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

(இ-7-139)

# கண்ணீர் அஞ்சலி

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய

**திரு. ஆ. சுப்பிரமணிய சர்மா**

அவர்களின் பாசமிகு மாமியார்

## திருமதி இராசாமணி ஐயர் அம்மணி அம்மா

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்கள்,
யாழ்ப்பாணம்.

(சி/14093)

# வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி உரும்பிராய் உப அலுவலகங்கள்

### 01. ஆதனவரி அறிவித்தல் - 2001

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்றவருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-2001 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு, அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படவேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31—01—2001 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**குறிப்பு:-**

01. 2000 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2001 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.
02. சேதமடைந்ததும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31—01—2001 க்கு முன் கிடைக்கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதன உரிமையாளர்களும், அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக்குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

### 02. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்:-

வலி. கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுவதற்கும், பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து, வலி. கிழக்கு பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என அறியத்தருகின்றேன்.

### 03. 2001 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமம்:-

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கான விண்ணப்பப் பத்திரத்தை வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பெற்று 31-12-2000 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் 2001 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிமக் கட்டணத்தை செலுத்தி வியாபார உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன். 31—03—2001 ஆம் திகதிக்குப் பின்னர் வியாபார அனுமதிப் பத்திரமின்றி எதுவித வர்த்தக நிலையங்களும் அனுமதிக்கப்படமாட்டாது என அறியத்தருகின்றேன்.

பூ. குணசிங்கம்
(ஜே. பி. யூ. எம்)
தலைவர்,
வலி. கிழக்கு பிரதேச சபை.

(சி/14081)

# பரிசளிப்பு விழா

சுழிபுரம், டிசெ. 2

சங்கானைக் கல்விக் கோட்டம் நடத்தும் சைவத் திருமுறைவிழாவும் சைவநெறித் தொண்டுபடு நிகழ்ச்சிப் பரிசளிப்பு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற உள்ளது.

காலை 7. 30 மணி முதல் அராலி மத்தி வண்ணபுரம் சிவன் ஆலயத்தில் பூசைகள் நடைபெற்று திருமுறைச் சுவடிகள் விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்படும்.

வரவேற்புரையை அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணரும் ஆசியுரையை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் வழங்குவர்.

சிறப்புரைகளை வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வீ இராசையா, தீவக கல்வி வலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன், வலி. மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இணைப்பாளர் கா. சந்திரராசா, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் சி. க. சிற்றம்பலம், வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை, ஆறு. திருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(ம-28)

# பொதுக்கூட்டம்

## பழைய மாணவர் சங்கம்
## யா. புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

விடயம்:- 125 ஆவது ஆண்டு விழா சம்பந்தமாகக் கலந்தாலோசித்தல்.

காலம்:- நாளை [03 — 12 — 2000]
ஞாயிறு 10.30 (மு.ப)

* பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

-செயலாளர்

(81142)


# மலிவு விற்பனை

## லைடன் புடைவை நிலையம்

நத்தார்-புதுவருட பண்டிகையை முன்னிட்டு

01-12-2000 — 31-12-2000 வரை

வாடிக்கையாளரின் நன்மை கருதி விசேட கழிவுடன் விற்பனைக்கு வருகிறது
இன்றே முந்திக் கொள்ளுங்கள்!

கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங், சூட்டிங் மற்றும் பல வகையான துணி வகைகள் வாங்கிக் கொள்ள முந்துங்கள்.

## லைடன் புடைவை நிலையம்

[பஸ் நிலையம் முன்பாக]

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/14021)


## வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம்.

# 2001 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

2000—11—09 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 2001—01—01 ஆம் திகதி தொடக்கம் 2001—12—31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| **1) சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 50000/- |
| 02. கருவாட்டுக் கடை இல. 4 | 60/- | 50/- | 100/- | 6160/- |
| 03. கருவாட்டுக் கடை இல. 6 | 60/- | 50/- | 100/- | 3850/- |
| 04. கருவாட்டுக் கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 3850/- |
| **2) உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01. இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 40000/- |
| **3) ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01. ஏழாலை சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | — | 250/- | 1000/- | 15000/- |
| 02 ஏழாலை மாட்டிறைச்சிக் கடை | — | 150/- | 1500/- | 40000/- |
| **4) சந்தை உட்புறக்கடைகள் இல. 17,20 (சுன்னாகம்)** | 375/- | 200/- | 1000/- | 20000/- |

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி:- 2000-12-11 பி. ப. 2 மணிவரை

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 2000-12-12 பி. ப. 2 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி:- 2000-12-12 பி. ப. 3 மணி

ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான தொகை கோரப்படின் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதோடு, கேள்வி வைப்புப் பணத்தையும் இழக்க நேரிடும்.

க. நவநீதன்
உப தலைவர்
வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.
2000—11—30

(சி/14074)

# யாழ். கடலேரியில் மீன்பிடிக்கும் எல்லையை அதிகரிக்க வேண்டும்

## மீனவர்கள் ஈ.பி.டி.பியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.2

✪ யாழ்.கடலேரியில் மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்படும் கடல் எல்லை நீடிக்கப்பட வேண்டும்.

✪ யாழ். மீனவர்கள் இரவு நேரத்தில் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் -ன் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கே.வி.குகேந்திரனிடம் மேற்படி இரண்டு கோரிக்கைகளையும் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கரலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதிநிதிகளே மேற்படி இரண்டு கோரிக்கைகளையும் விடுத்தனர். கலந்துரையாடலில் கடற் றொழிலாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

மீன்பிடித் தொழில் என்பது இரவு நேரத்தில் மட்டும்தான் செயல்படுத்துவது என்பது பாரம்பரிய நடைமுறை ஆகும். ஆனால் எமது மாவட்டத்தில் முற்று முழுவதுமாக மாற்றப்பட்டு பகல் நேரத்தில் மட்டும் ஒரு குறுகிய நேரத்திலும் குறுகிய தூரத்திலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதை மாற்றி குறிப்பிட்ட அளவு நேரத்திலாவது இரவுத் தொழிலைச் செய்வதற்கும் கூடுதலான தூரத்துக்கு மீன் பிடிப்பதற்கும் அனுமதி பெற்றுத் தருவதோடு பாரம் பரியமாக பகல் நேரங்களில் செய்யும் தொழில்களைத் தொடர்ந்து செய்வதற்கும் அனுமதி பெற்றுத்தரல் வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக 1990 ஆம் ஆண்டு முதல் வலிகாமம் வடக்கு வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்துள்ள கடற்றொழிலாளர்கள் அநாதைகளாய் அல்லலுற்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் மீளக் குடியமர்ந்து சுதந்திரமாகத் தொழில் புரிந்து நிம்மதியாக வாழ வழி சமைத்துக் கொடுக்க வேண்டியது தங்களது பொறுப்புள்ள கடமையாகும்.

1995ஆம் ஆண்டிற்குப் பின் இராணுவ நடவடிக்கைகளால் தொழில் வாய்ப்பை முற்றாக இழந் திருந்த தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஆகிய பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் தொழில் இழப்புக்கான கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை. இவற்றை உடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இராணுவத் தேவைகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களையும் பிரதேசங்களையும் மீட்டெடுக்க வலுவான நடவடிக்கைகள் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் பிரதேசங்களிலும் குடியிருப்புக்களிலும் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

கடற்றொழிலாளர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து தொழில் வசதிகளையும் ஏனைய வசதிகளையும் கொண்ட பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்களை அமைத்துத்தர வேண்டும்.

கடற்றொழிலாளர்கள் அனைவரும் தத்தமது பிரதேசங்களில் சுதந்திரமாகத் தொழில் செய்யும் காலம் வரைக்கும் அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணங்களும், கொடுப்பனவுகளும் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படக் கூடாது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-5-6-173)

### அரச அதிபரிடம் படையினர் ஒப்படைத்த

# தங்க நகைகளுக்கு உரிமை கோரும் கால எல்லை மாத இறுதிவரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போது கண்டெடுக்கப்பட்டு கடந்த செப்ரெம்பர் மாதம் இராணுவத் தளபதியால் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுக்கள் ஆகியவற்றுக்கு உரிமை கோருவதற்கான கால எல்லை இம்மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

உரிமைகோருவோர் தமது பொருள்களின் எழுத்து அடையாளங்கள் வேலைப்பாடுகள், மாதிரி அமைப்பு, நிறை என்பனவற்றை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பிக்குமாறும் -

குறிப்பிடப்படும் விவரங்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நகைகள், பிஸ்கட்க்கள் ஆகியவற்றைக் கையளிப்பது தொடர்பான விவரம் பத்திரிகை மூலம் பொதுமக்களுக்கு பின்னர் அறியத்தரப்படும் என்றும் -

அரச அதிபர் கே.சண்முகநாதன் மேலும் தெரிவித்தார்.

(ம-5)

# ஆங்கில படிப்புகள் வட்டம் அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் படிப்புகள் வட்டம் (English Studies Circle) ஒன்று அமைக்கப்பட உள்ளது.

உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்களைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களின் முன் முயற்சியுடன் இந்த ஆங்கிலப் படிப்புகள் வட்டம் உருவாக்கப்படுகிறது.

இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பல்துறை சார்ந்த, ஆங்கில தொடர்பாடல் மேற்கொள்ளக் கூடிய அனைவரும் இந்த ஆங்கிலப் படிப்பு வட்டத்தில் இணைந்து கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பலதுறை சார்ந்த விடயங்களில் எதிர்காலத்தில் முற்றிலும் ஆங்கில மொழி மூலமான ஆய்வுப் பட்டறைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை நடத்த இந்தப் படிப்புகள் வட்டம் முயற்சிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்தவர் சகோதர பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன்.

உண்மைகளைச் சீரணிக்க முடியாதவர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டார். மூன்று சின்னஞ்சிறார்களைக் கொண்ட அவரின் இளம் குடும்பத்துக்கு உதவும் மனிதாபிமானப் பணியை உதயன் ஆரம்பித்தது.

நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அள்ளி அள்ளி வழங்கி எமது மக்களின் இரக்க சிந்தைக்குச் சிகரம் வைக்கிறார்கள். எமக்கு மத்தியில் அன்புள்ளங்கள் நிறைந்துள்ளன. என்று எடுத்துக்காட்டி வருகின்றனர்.

உதவி நிதி நாளாந்தம் வந்து குவிகிறது இந்நிதியை நிமலராஜன் குடும்பத்தினரிடம் உரிய முறையில் சேர்ப்பிக்கும் பொருட்டு அன்பளிப்புகளைப் பெறுவதை எதிர்வரும் (டிசெம்பர்) 5ஆம் திகதியுடன் பூர்த்தி செய்ய உள்ளோம் என்பதை அறியதகருகின்றோம்.

கருணையும், வள்ளல் தன்மையும உள்ள எங்கள் வாசகர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

**30.11.2000 (வியாழக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 10,37,379.00 |
| 1. | செல்வி கவிதா நினைவாக அன்புப் பேரன் செ. பத்மநாதன், குளுக்கண்டி, கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் - | 5,000.00 |
| 2. | க.இ.கு. அரவிந்த வாசம், யாழ். -(வங்கியூடாக) - | 250.00 |
| 3. | திருமதி மகேஸ்வரி குமாரசாமி - 19/1 ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் (வங்கியூடாக) - | 250.00 |
| 4. | அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - வல்வெட்டித்துறை (வங்கியூடாக) - | 1,668.75 |
| 5. | சபாதியாகராஜா - ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் - | 50.00 |
| | மொத்தம் | - 10,44,597.75 |


ASSEMBLY OF GOD, CHUNNAKAM.

**GIVE GOD THE GLORY**

15TH ANNIVERSARY PRAISE AND WORSHIP

**(1985 - 2000)**

**A Special Thanks Giving Service will be held on the 3rd December 2000 at 9.00 A.M (SLT) in the Church - Hall**

**✳ There are hundreds of people who are being healed and liberated from their sins, incurable diseases, evil habits and demonic - afflictions by the power of God through the ministry of the Church.**

**Jesus Said, "come", "and you will see" (John 1:39A)**

Assembly of God,
Library View,
K.K.S.Road,
CHUNNAKAM.

(C/14090)



அசெம்பிளி ஒவ் கோட், சுன்னாகம்.

**கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக**

15ஆவது ஆண்டு துதி ஆராதனை
(1985 - 2000)

ஞாயிறு காலை புதிய நேரம் 9.00 மணி 3ஆம் திகதி 2000 ஆண்டு சபை மண்டபத்தில் ஒரு விசேட நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும்.

✳ பாவங்களிலிருந்தும், தீராத நோய்களிலிருந்தும், தீய பழக்க வழக்கங்களிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் இச்சபையின் ஊழியத்திற்கூடாக தேவ வல்லமையினால் நூற்றுக் கணக்கானோர் விடுதலையாக்கப்படுகின்றார்கள்.

இயேசு சொன்னார், "வந்து பாருங்கள் என்றார்" (யோவான் 1:39அ)

**அசெம்பிளி ஒவ் கோட்,**
**நூல் நிலையப்பார்வை,**
***கே.கே.எஸ். வீதி,***
***சுன்னாகம்.***

(14091)



உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வ மங்களகரமான விக்கிரம வருடம் கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20மணி தொடக்கம் பிற்பகல் 12.40 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமங்கள சுபமுகூர்த்த வேளையில்

*திரு. திருமதி. தவயோகம் சற்குணம்மா*
தக்குட்சம்பதி, துன்னாலை மேற்கு,
கரவெட்டி
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**குகதாசன்** (குகன்)
அவர்களுக்கும்



*திரு. திருமதி தவத்துரை கமேந்திராதேவி*
பறாளாய் வீதி, காழுவன்,
சுளிபுரம்.
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
***அனுசூயாதேவி*** (யமுனா)
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து இத்திருமண விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமணம் நடைபெறும் இடம்:**

**Restaurant Krone Sall,**
**Hauptgasse 2,9620 Lichtensteig, swiss.**

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு.தவயோகம்
திரு.திருமதி அருமைச்செல்வம் (லண்டன்)

திரு.திருமதி மனோகரதாசன் (சுவிஸ்)
திரு.திருமதி ரவி (சுவிஸ்)
திரு.திருமதி குகதாசன் (சுவிஸ்)
திரு.திருமதி புஸ்பகரன் (பிரான்ஸ்)

(இரு வீட்டார் அழைப்பு)

(C/14059)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. நன்னித்தம்பி இராஜரத்தினம்**

நாகம்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும் உரிமையாளருமாகிய **ந.இராஜரத்தினம்** அவர்கள் 17.11.2000 அன்று யாழ் மாவட்ட சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் செய்ததையிட்டு அவருடைய பணி இன்று போல் என்றும் தொடர மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

கு.சிவகுமார்
ம.குகமூர்த்தி
செ.டயேந்திரா
திருமதி சிவசுப்பிரமணியம்
திருமதி நிரஞ்சன்

*சுன்னாகம்.* (81068)

# - நல் வாழ்த்துக்கள் -



## திரு.நாகர் ஆறுமுகம்

தெல்லிப்பழையை (தபாற் கந்தோர் அருகில்) பிறப்பிடமாகவும் இணுவிலை தற்போது வசிப்பிடமாகவும் கொண்டவரும் தெல்லி. வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையத்தின் (1943) ஸ்தாபகரும் நிலையத்தின் தற்போதைய போசகரும், தெல்லி. 'கன்னிவளவு' பிள்ளையார் கோயிலின் ஸ்தாபகர்களில் ஒருவரும், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் நிர்வாக சபை உறுப்பினரும், அரசாங்க கட்டட ஒப்பந்த காரரும், 'தேவிவிமானம', 'ஸ்ரீ இராமகிருஸ்ணா' லொறிகளின் உரிமை யாளரும், 'கரன்' உள்நாட்டு வெளிநாட்டு மதுபான விற்பனை நிலைய உரிமையாளருமான

**திரு. நாகர் ஆறுமுகம்**

அவர்கள் நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட சமாதான நீதிவான் நியமனத்தை மாவட்ட நீதிபதி உயர்திரு. பா. சுப்பிரமணியம முன்னிலையில் 02.11.2000 அன்று பெற்றதை முன்னிட்டு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். இவர் 'கன்னிவளவு' பிள்ளையாரின் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்குப் பணி புரிய எமது நல்லாசிகள் உரித்தாகுக!

*தற்காலிக முகவரி:*
*ஓடக்கரை வீதி,*
*சங்கானை.*

சி. பாலசிங்கம் குடும்பத்தினர்,
(தபாற் கந்தோர் அருகில்)
தெல்லிப்பழை. (81081)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி-யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும்

## செல்வி கலையரசி கணபதிப்பிள்ளை

**ஆகிய எமது மாணவி மிலேனியம் ஆண்டில் நாவலர் குரு பூசைத் தினம் தொடர்பாக நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் *நாவலரின் கல்விப்பணி* என்ற தலைப்பில் பங்குபற்றி தங்கப்பதக்கத்தைப் பெற்று, பாடசாலைக்கும் அச்சுவேலி கிராமத்திற்கும் பெருமை சேர்த்தமைக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

அதிபர்,
ஆசிரியர்கள்,,
(81105) பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

# மோதல் தவிர்ப்பு உடன்பாடுகாண அரசும் - புலிகளும் முன்வரவேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு,டிசெ.2

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வேயின் சமாதான முயற்சியை முன்னெடுக்கும் முகமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் விடுத்த சமாதான அழைப்பை முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கிறது. இந்தச சந்தர்ப்பத்தில் விடுதலைப புலிகளும் - அரசும் நல்லெண்ணப் புறநிலை ஒன்றை ஏப்படுத்தி மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும் -

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிப கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கான சூழ்நிலை ஏற்படுத்தாது பேச்சுக்களை நடத்த முடியாது. அவ்வாறு நடத்தப்படும் பேச்சுக்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்காது.

பேச்சுக்கான கதவு திறந்துள்ள இந்த வேளையில், இரு தரப்புகளும் தமக்கிடையிலான சந்தேக - அவ நம்பிக்கை நிலைகளைத் தவிர்த்து மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு உடன்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கு விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர் என்ற நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்ற வெளி நாடுகளின் நிலைப்பாட்டை அரசும் விடுதலைப்புலிகளும் மெய்ப்பிக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் மேலும் கூறினார். (இ-8)

### யுனெஸ்கோ கொடுப்பனவுகளை பெறக் கோரிக்கை

யுனெஸ்கோ அமைப்பின் ஏற்பாட்டில கடந்த பெப்ரவரி மாதம் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகளை அந்தந்தப் பிரதேசங்களில் செயற்பட்ட பணி இணைப்பாளர்களிடம் இருந்து நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் நா.க.சண்முகநாத பிள்ளை கேட்டுள்ளார். (ம-5)

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விவரம் திரட்டல்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றியோரின் விவரங்கள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன. இடம்பெயர்வுக்கு முன்னர் வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தாம்கடமையாற்றிய பாடசாலை அதிபரிடம் அது தொடர்பான அனைத்து விவரங்களையும் டிசெம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ம-117)

# நிமல்



குருஷேத்திர
மையத்திலிருந்து
தன்னின
மக்களின்
உரிமைக்காக
தனது பேனாவை
ஆயுதமாக்கி
உறுதியாகக்
குரல் தந்தவன்

இவன்
மரணிக்கவில்லை
நீங்காத
நினைவாக
நீக்கமற
நிறைந்துள்ளான்

## 45ஆம் நாள் நினைவு அழைப்பு

**02.12.2000**

அன்புடையீர்!

19.10.2000 வியாழக்கிழமை அகாலமரணமடைந்த எமது அன்புச் செல்வம்

## அமரர் மயில்வாகனம் நிமலராஜன்

(சர்வதேச சுதந்திர பத்திரிகையாளர்)

அவர்களது 45ஆம் நாள் நினைவுத் திருப்பலி சுண்டுக்குளி, ஆஸ்பத்திரி வீதி, புனித யுவானியார் ஆலயத்தில் (02. 12. 2000) சனிக்கிழமை காலை 10. 30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்வதுடன் தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொளுமாறும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*17/3, கச்சேரி நல்லூர் வீதி,*
*(புகையிரத பாதை வழியாக)*
*யாழ்ப்பாணம்.*

**- குடும்பத்தினர்.** (01457)

# 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 09 - 04 - 1919 | 02 - 11 - 2000 | 10 - 05 - 1956 | - - 2000 |

திருமதி
**சிவக்கொழுந்து நாகரத்தினம்**

அமரர்
**சிவக்கொழுந்து தேவராசா**

02-11-2000 கந்தசஷ்டி திதியில் இறைபதம் அடைந்த எம் அன்புத்தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இன்று (02-12-2000) சனிக்கிழமை காலை 11 மணியளவில் எமது தாயாரினதும், வன்னியில் இறைபதம் அடைந்த தம்பியினதும் வீட்டுக்கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

மக்கள்:- விஜயலட்சுமி,
சிவலிங்கம்,
தேவராசா(மறைவு)
மருமக்கள்:- பொன்.மதிமுகராசா,
தேவராணி
பேரக்குழந்தைகள்:-
விஜயமதி, கஸ்தூரிமதி,
விஜயகாந், விஜயவர்மன்,
சிவநேசன், சிவபாலன்,
நிரஞ்சனா, சிவரூபன்.

தகவல்:
சி. சிவலிங்கம் (மகன்)
*"ஸ்ரீமுருக பவனம்"*
*மானிப்பாய் வீதி,*
*தாவடி.*

(81045)

## வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின்
### கொத்தணி.

நெல்லியடி, - கரவெட்டி.

# திக்கம் பனஞ்சாராயத்தின் விலை மாற்றம்

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயத்தின் சில்லறை விலை 01.12.2000 முதல் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| பனஞ்சாராயம் 750 மில்லி (1 போத்தல்) | 215.00 |
| பனஞ்சாராயம் 375 மில்லி (1/2 போத்தல்) | 110.00 |
| பனஞ்சாராயம் 180 மில்லி (1/4 போத்தல்) | 60.00 |

பொது முகாமையாளர்,
வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கொத்தணி.

(81097)


## தேடுதல்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட வளாகத்தினுள் சென்று நேற்றுமுன்தினம் படையினர் தேடுதல் நடத்தினர். (இ-8)

## பெரியார் வீரசிங்கம் நினைவுதினம்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 36 ஆவது நினைவு தின விழா யாழ்.வீரசிங்கம் கட்டடத் தொகுதி இரண்டாம் மாடியில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனக சபாபதி தலைமையில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அமரர் வீரசிங்கத்தின் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ம-173)


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் கார்த்திகைத் திங்கள் 18 ஆம் நாள் நாளை (03.12.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிமுதல் 11.15 மணிவரையுள்ள சித்த யோகமும் சதய நட்சத்திரமும் மகர இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்,

மீசாலை கிழக்கு, மீசாலை
திரு. திருமதி விநாயகமூர்த்தி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
செல்வன்
**உதயணன்** (உதயன்)
அவர்களுக்கும்



விமன் காமம், தெல்லிப்பழை
திரு. திருமதி சாம்பசிவம்
தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி
**சிவாஜினி** (ராஜி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு

**வெள்ளவத்தை, மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் 'சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில்'** நடைபெறும் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்

**அன்புடன் அழைக்கின்றோம்.**

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு.திருமதி
**விநாயகமூர்த்தி விமலாதேவி** தம்பதிகள்
17/1, 55ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு,06.
தொலைபேசி: 074-510904

இது விட்டார் அழைப்பு

திரு.திருமதி
**சாம்பசிவம் தேவராணி** தம்பதிகள்
19/1, 55 ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை,
கொழும்பு,06.
தொலைபேசி: 598353

(80825)



# HARVEST

# ஹாவெஸ்ட்

## புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின் பசுமையான தோட்டங்களிலிருந்து வரும் ஹாவெஸ்ட் தேயிலை.....

நறுமணமும் புத்துணர்வும் தந்திடும் தேநீரை நீங்கள் பருக நுட்பமாகக் கலவை செய்யப்பட்டுள்ளது.




## 100 கிறாம் பக்கெட்டுகளில் கிடைக்கும்

Marketed by
BURNS
PHILP LANKA (PVT) LTD.
124, Templers Road, Mt.Lavinia.

JEYARASA & COMPANY
104.A, Stanley Road, Jaffna.



# SUBRA கல்வி நிறுவனம்
## சித்தன்கேணி
# பரிசுத்தின விழா - 2000

இடம் : யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலை
காலம் : நாளை (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை
பகல் 1.00 மணி
தலைவர் : திரு.அ.ஜெயதாசன்
(ஆசிரியர் - பௌதிகவியல்)

❊ பிரதம விருந்தினர்கள் ❊

**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**
(தலைவர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

**திரு.ந.திரிலோகநாதன் J.P.U.M**
(தலைவர், வலி.மேற்கு, பிரதேச சபை)

❊ சிறப்பு விருந்தினர்கள் ❊

**திரு.சி.செல்லையா**
(உதவிக் கல்விப் பணிப்பாளர், சங்கானை கோட்டம்)

**திரு.கா.சந்திரபாலன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்)

**திரு.க.இராசதுரை** (அதிபர் - யாழ்.மத்திய கல்லூரி)

**திரு.ச.சிவானந்தன்**
(விரிவுரையாளர், மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்)

❊ கௌரவ விருந்தினர்கள் ❊

**திரு.கா.சந்திரராசா** (ஓய்வு பெற்ற பிரதேச செயலர் - சங்கானை)

**திரு.ந.ஓங்காரமூர்த்தி**
(உப அதிபர் - யாழ்.மத்திய கல்லூரி)

**திரு.ச.இராமலிங்கம்** (அதிபர் - வட்டு.இந்துக் கல்லூரி)

**திரு.க.சந்திரசேகரன்**
(அதிபர் - ஸ்ரீகணேச வித்தியாசாலை, சித்தன்கேணி)

**பண்டிதர் ப.இராசகுரு** (பிரசித்த நொத்தாரிசு)

**திரு.S.கனகரத்தினம்**
(முகாமையாளர், சங்கானை பல நோ.கூ.சங்கம்)

**திரு.சி.நவரத்தினம்** (கிராம உத்தியோகத்தர்)

**திரு.S.ஸ்ரீதரன்** (கிராம உத்தியோகத்தர்)

**பிரம்மஸ்ரீ ச.வாசுதேவசர்மா**
(சிவாச்சாரியார், சிவன் தேவஸ்தானம் - சித்தன்கேணி)

**வணபிதா M.சுதர்சன்** (சண்டிலிப்பாய் தேவாலயம்)

## ✳ கலை நிகழ்ச்சிகள் ✳

☛ நிறுவன மாணவர் நிகழ்ச்சிகள்
☛ பட்டி மண்டபம்:

**சின்னத்திரையும், சினிமாவும் எமது சமுதாய வளர்ச்சிக்குத் தடை, தடையில்லை**

நடுவர்:திரு.இரா.செல்வவடிவேல் (விஞ்ஞான ஆசிரியர்)

| தடை | தடையில்லை |
|---|---|
| திரு.நாக.தமிழிந்திரன் | திரு.எஸ்.பி.சாந்தன் |
| திரு.க.துற்ஜெயந்தன் | திரு.ந.தயாபரன் |
| திரு.ஈ.எஸ்.பவன் | திரு.சி.கிருஷ்ணகுமார் |

கீர்த்தனாஸ் இன்னிசைக் குழுவினருடன் எமது நிறுவன மாணவ, மாணவிகள் இணைந்து வழங்கும்

## ✳ இன்னிசை கானங்கள் ✳

*இவ் விழா சிறப்புற அனைவரையும் அன்பு கொண்டு அழைக்கின்றோம்.*

*எஸ்.ஐங்கரன்* (நிறுவன நிர்வாகி)
*ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.*

(81080)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. நன்னித்தம்பி இராஜரத்தினம்**
(நாகம்ஸ் உரிமையாளர்)

அவர்கள் 17-11-2000 அன்று யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மகள், மருமகன்
ரதனி - சிவகுமார்
பிள்ளைகள்:-
சந்துயன், வினிஷா.

*சி.சிவகுமார்,*
42/6 **K.K.S.** *றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(81094)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ். கௌரவ இந்துசமய, சைவ உணவு உட்கொள்ளும், குடி, புகைத்தல் போன்ற பழக்கமற்ற, அரச திணைக்களத்தில் கடமையாற்றும், 34வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல.1148, மே/பா உதயன். (81027)

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த வயது 38, கிரகபாவம் 20, இலண்டனில் அரசில் பொறியியலாளராக பணிபுரியும் மணமகனுக்கு அழகிய, பட்டதாரி பெண் தேவை என பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். தொடர்புக்கு:- விள.இல.1149, மே/பா உதயன். (81050)

## விற்பனைக்குண்டு

**YAMAHA V90T** மோட்டார் சைக்கிள்-ஜப்பான் விற்பனைக்கு உண்டு. தனிப்பாவனையிலும் மிகவும் உன்னதமான நிலையிலும் உள்ளது. நேரில் பார்வையிடலாம். தொடர்பு:- 'சரஸ்வதி வாசா', சின்னப் பிள்ளையாரடி, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. (81038)

பெண்ணின் பாவனையில் உள்ள **HONDA C-50 SUPERCUP** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரோண்/கணேசன், மணியகார ஒழுங்கை, வட்டுக் கோட்டை. பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். (81107)

எம்மிடம் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் **ANKUR (Hero-Majestic)** நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 190,கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (81120)

200 செம்மறி ஆடுகள் விற்பனைக் குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: அ.நல்லதம்பி **(T.R.R.O)**, மானிப்பாய வீதி, உரும்பிராய்.(81028)

## தவறிவிட்டது

ஐயாத்துரை ஞானசேகரம் என்பவருடைய தேசிய.அ.அ.(இல.600232037**V**), விசேட அ.அட்டை என்பன 26.11.2000 யாழ்ப்பாணத்துக்கும இராசவீதி, கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐ.ஞானசேகரம், கோப்பாய் மத்தி, அரசடி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (81079)

மீசாலை வடக்கைச் சேர்ந்த தங்கராசா சுபாகினி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.777383698**V**), விசேட அடையாள அட்டை (இல.091028185) என்பன பேர்ஸுடன் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் கிழக்கு கிராம சேவை(**J** 138) அலுவலரிடம் கொடுத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (81106)

கந்தையா மனோகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.600742957**V**), விசேட அடையாள அட்டை என்பன 28.11.2000 அன்று கோப்பாய்க்கும், திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் வெஸ்கோ தேநீர்சாலை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (81089)

அரியாலையைச் சேர்ந்த செ. தர்மசேன என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.740654411**V**) யாழ். நகருக்கும் கொக்குவிலுக்கும் இடையில் 11.11.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 106, தொழில்நுட்ப கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (81128)

நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த தாமோதரஐயர் மாரீஸ்வரன் என்பவரது விசேட அடையாள அட்டை (இல.0902042311) 17.11.2000 அன்று யாழ். மத்திய கல்லூரிக்கும், நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். (81127)

நாகபூசணி வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் கமலநாதன் என்னும் முகவரியுடைய விசேட அ.அட்டை(இல.521980249**V**) உரும்பிராய்ச் சந்திக்கும் ஊரெழுவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (81135)

## மணமகன் தேவை

வல்வையில் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 ஆம் ஆண்டு பிறந்த, உதயத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள 5'5" உயரமான நற்பண்பு நிறைந்த அரச அதிகார சபையில் கடமைபுரியும் மணமகளுக்கு நற்குணம் மிக்க, செவ்வாய் குற்றமுள்ள அரச சார்பான தொழில், சுயவியாபாரம் போன்ற தொழில் புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு:- சிவபசுபதி, அம்மன்கோயிலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. (81069)

## O/L ENGLISH MODEL PAPER WITH ANSWERS

மார்கழி 2000 மாதத்திற்கான பரீட்சார்த்திகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் அனைத்து இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். **K.** சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (81073)

## A/L பௌதிகவியல்

சிறு குழுவாகவோ, தனியாகவோ **A/L** பௌதிகவியல் கற்பிக்கப்படும். தொடர்பு:- **S.**மூர்த்தி **B.Sc. C/O Mrs. J.**மகாதேவா, 435, கோயில் வீதி, நல்லூர். (81057)

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படங்கள், யாதகங்களுடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (81123)

## தேவை

காட்டு றோஜா தடிகள் தேவை. இலையுடன் கொண்டு வரவும். அத்துடன் தினை/சாமை தேவை. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80975)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (80790)

## புலமைப் பரிசில்-2001

பரீட்சை 12இல்
அதிகூடிய புள்ளிபெற்ற
பரிசுக்குரியவர்கள்

| | |
|---|---|
| அ.சாயினி | - 183 |
| உ.நிவேதிகா | - 183 |
| ஆ.ஜதிகானந்த் | - 180 |
| செ.நிரோஜன் | - 176 |
| ந.வேணுசரன் | - 176 |

அடுத்த பரீட்சை நாளை.
பரீட்சை இருநேரங்களில
காலை8.30மணி காலை10.30 மணி

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(81121)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடத்தும் சமய அறிவுப் போட்டி - 2000

கல்வித் திணைக்களங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிக்கிடையே 04 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) பின்வரும் நான்கு நிலையங்களிலும் நடத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

01. யா/வட. இந்து மகளிர் கல்லூரி.
02. யா/இராமநாதன் கல்லூரி.
03. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
04. யா/இந்து மகளிர் கல்லூரி.

மாணவர்களின் பாடத்திட்டதிற்கமைவான மேற்படிப் போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை 15.12.2000 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அன்றேல் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தோ ரூபா 20/= ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரீட்சைத் திகதி - 23-12-2000**

*சைவசமய விவகாரக் குழு,*
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.*

## கண்ணீர் அஞ்சலி

எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களில் 1960 களில் பெண்பாத்திரம் ஏற்று நடித்து 1998ஆம் ஆண்டு 79 ஆவது விழாவில் கௌரவிக்கப்பட்டவருமான முன்னாள் உத்தியோகத்தர் (தபால் திணைக்களம்)

**நவரத்தினம் சண்முகராசா (சந்திரா)**

அவர்கள் கொழும்பிலும்

1940 களின் ஆரம்பக்காலத்தில் யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டு வீரனும், அரியாலையின் பல பொது தாபனங்கள், சமூகப்பணி மன்றங்கள், ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் கௌரவ கணக்காய்வாளரும் அரி/சரஸ்வதி சனசமூக நிலைய போஷகரும் முன்னாள் பிரதம கணக்காய்வாளர் (புகையிரத திணைக்களம்)

**பொன்னம்பலம் தருமலிங்கம்**

அவர்கள் நல்லூரிலும்

அரியாலையின் பல சமூகப்பணி மன்றங்கள், அரியாலை சரஸ்வதிசனசமூகநிலையம், அரியாலை ஐக்கியகழகம், சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா, மத்திய விளையாட்டு மைதானசபை, அரியாலை விவசாய சம்மேளனம் ஆகியவற்றில் முக்கிய பதவிகள் வகித்து சிறப்பாக பணியாற்றியவரும் சமூகசேவைக்காக விழாவில் கௌரவிக்கப்பட்டவரும், முன்னாள் முகாமையாளர் (மக்கள் வங்கி ஊர்காவற்றுறை)

**ஆறுமுகம் சண்முகநாதன் (A.சண்முகம்)**

அவர்கள் சென்னையிலும்

திடீரென அமரத்துவம் எய்தியமையால் கவலையுறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள். அமரர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**நிர்வாகங்கள்**
**அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா.**
**அரியாலை ஐக்கியகழகம்.**
**அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்.**

(14089)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறந்த சமூக சேவையாளனும் எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும் நாகம்ஸ் நிறுவனங்களின் உரிமையாளருமாகிய

**உயர்திரு.**
**நன்னித்தம்பி இராஜரத்தினம்**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு சுன்னாகம் வர்த்தகர்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

*நிர்வாகம்,*
*சுன்னாகம் வர்த்தக சங்கம்.*

(81125)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**கலாநிதி S.T.B. இராஜேஸ்வரன்**

(சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 புவியியல் துறை யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.)

2000 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் புவியியல் கலாநிதி பட்டம் வழங்கியமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

**SUBRA (14)**
கல்வி நிறுவன இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்
சித்தன்கேணி.

(81090)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு.**
**நன்னித்தம்பி இராஜரத்தினம்**

(நாகம்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும் உரிமையாளரும்)

17.12.2000 அன்று யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரது பொதுப்பணி மேன் மேலும் தொடர, எம் மக்கள் இடம்பெயர்ந்து அல்லல்படும் போது அவர்களுக்கு இருக்க இருப்பிடமும், உணவும் கொடுத்து எம்மை இருகரம் கொண்டு வரவேற்று உபசரித்த உயர்திரு. நன்னித்தம்பி இராஜரத்தினம் ஐயா அவர்களின் தொண்டும் பொதுப்பணியும் மேன்மேலும் தொடர நல்லூர் கந்தன் அருள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**K.கனகசபாபதி குடும்பத்தினர்,**
*சங்கம் வீதி, சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

தற்போதைய முகவரி:-
*K.கனகசபாபதி,*
*92, பழம் றோட், கந்தர்மடம்.*

(81108)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது சக மாணவன்
**வே. உதயகுமார் அவர்களின்**
அன்புத் தாயார்
**திருமதி வேலாயுதர் இராசம்மா**
அவர்கள்

இறைபதம் அடைந்ததையிட்டு எமது இதயபூர்வ அஞ்சலியினை செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய உயர் கல்லூரி
விரிவுரையாளர்களும்
**B.A** இறுதிவருட
(யாழ். பல்கலைக்கழக வெளிவாரி)
மாணவர்களும்.

*ஆரியகுளம்,*
*யாழ்ப்பாணம்.*

(80986)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உயர்தரப்) பரீட்சைப் (எமது சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட) பெறுபேறுகளின் படி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களையும் சிறந்த பெறுபேறுகளைட் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அ. அன்ரனிற்றா 2A B (கலை)
சி. வித்தியகுமார் 2A C (கணிதம்)
யே. யோசப்பின் யாழினி A B C (கலை)
யோ. யோன்மயூரன் A 2B S (கலை)
செ. துஷ்யந்தன் 2B C S (வர்த்தகம்)

சூரியோதயா சனசமூக வாழ்மக்கள்
மாகியம்பதி. (81143)

# மரண அறிவித்தல்கள்

## இராசு செல்வரெத்தினம்

(மணியம் - சித்தப்பா)

(அம்பாள் மரக்காலை உரிமையாளர் வீரகாளி அம்மன் கோவிலடி நல்லூர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், அரசடி 5 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராசு செல்வரெத்தினம் அவர்கள் 30 - 11 - 2000 அன்று காலமாகி விட்டார்

அன்னார் இராசு அன்னப்பிள்ளையின் மூத்த மகனும் காலஞ்சென்ற கந்தையா பார்வதியின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் (கமலா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரஜனி (யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவி), றஜனிக்காந்த், றஜனிதரன்(யாழ். மத்தியகல்லூரி, கலைப்பிரிவு மாணவன் 2000 ஆம் ஆண்டு), தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இரத்தினம், யோகம்மா (கிளி), துரைசிங்கம், பொன்னுத்துரை, சந்திரமலர், சிறிராசன் (பெயின்ரர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அரியகுட்டி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சாமி, சதாசிவம், நயினார் சண்முகராஜா, இராசம்மா, கண்மணி, பிள்ளையம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (02 - 12 - 2000) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
கந்தர்மடம். (81117)

## கந்தையா வேலாயுதபிள்ளை

கைதடியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் கந்தையா வேலாயுதபிள்ளை கொழும்பில்காலமானார்

இவர் இலட்சுமியாரின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், வனிதா (ஆசிரியை, கொழும்பு), சத்தியபாமா (ஆசிரியை, திருமலை), சிவரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருக்குமரன் (வரி மதிப்பீட்டாளர், கொழும்பு மாநகர சபை), சுதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமிர்தன், பவுத்திரா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேசியா), சிதம்பரப்பிள்ளை (சுழிபுரம்), சின்னாச்சிப்பிள்ளை (சுழிபுர ) மற்றும் பொன்னாச்சி, கந்தசாமி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 2-12-2000 தெகிவளை, கொழும்பு மலர்ச்சாலையில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சத்திய பாமா (மகள்)

காழுவன்,
சுழிபுரம். (81118)

## தில்லைநடராசா இராசம்மா

பெரியவிளானைப் பிறப்பிடமாக கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமான தில்லைநடராசா இராசம்மா 29 - 11 - 2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லை நடராசாவின் (நீர்வேலி) அன்புமனைவியும், இளமுருகனின் (முன்னாள் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளர்) அன்புத்தாயாரும், கமலினியின் அன்பு மாமியாரும், டிலோசனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-11-2000 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

அன்னாரின் துக்கம் சண்டிலிப்பாய் மத்தியில் உள்ள சகோதரியின் ஆழகாபுரி இல்லத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

தகவல்
சு. சேனாதிராசா,
த. கிருஷ்னேஸ்வரி.
(உபதபால் அதிபர், விளான்)
(பெறாமக்கள்)

அழகாபுரி,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (81136)

# ஜி. சீ. ஈ. (சாதாரண) தரம்:
# தென்மராட்சி பரீட்சை நிலையங்கள்
# வடமராட்சி, வலிகாமத்துக்கு மாற்றம்

தென்மராட்சி, டிசெ. 2

ஜி. சீ. ஈ. (சாதாரண)தர பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் பரீட்சை நிலையங்கள் வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்ட நிலையங்களின் விவரம் வருமாறு:-

வரணி மகா வித். மண்டப இல. I, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித். மண்டப இல. I ஆகியவை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும்—

வரணி மகா வித். மண்டப இல. II, மீசாலை வீரசிங்கம் மகா வித். மண்டப இல. II ஆகியவை கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியிலும்—

மீசாலை வீரசிங்கம் ம. வி. மண்டப இல.I யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்திலும்—

கொடிகாமம்திருநாவுக்கரசு ம வி மண்டப இல.II வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியிலும்—

கச்சாய் அ. த. க. பாடசாலை இமையாணன் அ. த. க. பாடசாலையிலும்—

உசன் இராமநாதன் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டப இல.I, மண்டப இல II ஆகியவை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்—

மீசாலை விக்கினேஸ்வரா ம. வி. நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த. க. பாடசாலையிலும் —

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, புலோலி மெதடிஸ்த மிஷன் த. க. பாடசாலையிலும்—

சாவகச்சேரி மகளிர் கல்லூரி. அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும்—

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி. கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியிலும்—

பளை மத்திய கல்லூரி மண்டப இல I பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்—

பளை மத்திய கல்லூரி மண்டப இல II, பருத்தித்துறை வட இந்து ஆரம்ப பாடசாலையிலும்—

வேம்பொடுகேணி சி. சி த. க. பாடசாலை தம்பசிட்டி மெ மி. த. க பாடசாலையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் பகுதியில் அமைக்கப்பட்ட நிலையங்களின் விவரம் வருமாறு:-

நாவற்குழி ம. வி. உடுவில் முருகமூர்த்தி வித்திபாலயத்திலும், கைதடி முத்துக்குமாரசாமி ம. வி. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் உடுவில் இராமநாதன் கல்லூரியிலும். வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு உடுவில் மகளிர் கல்லூரியிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ் திருமறைக்கலாமன்றதினம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு திருப்பலியும், ஒன்றுகூடலும் நடைபெறும். தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு பொது நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜே. பி. ஈ. செல்வராஜா அடிகள் சிறப்புவிருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்வார்கள்.

குடிவின் கானங்கள் ஒலிநாடா வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும், சோழன்மகன் நாட்டுக்கூத்தும் இடம்பெறும் (ம-173)

★ ★ ★

வலிகாமம் மேற்கு, டிசெ.2

சித்தன்கேணி சுப்றா கல்வி நிறுவனத்தினரின் இந்த ஆண்டுக்கான பரிசுத்தின விழா சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணியளவில் நடைபெறவுள்ளது.

பௌதிகவியல் ஆசிரியர் அ. ஜெயதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அவர்களும் வலி.மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ, சிறப்பு விருந்தினர்களாக பல பெரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. சின்னத்திரையும் சினிமாவும் எமது சமுதாய வளர்ச்சிக்கு தடை, தடையில்லை என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன. (ம-175)

★ ★ ★

வலி. மேற்கு, டிசெ. 2

வட்டு. வடக்கு சமுர்த்தி செயலணி அமைப்பதற்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் வட்டு. வடக்கு அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வலய சமுர்த்தி முகாமையாளர் செல்வி சு. குமரேஸ்வரி தலைமையில் சமுர்த்தி செயலணிக்குழு தெரிவு செய்யப்படவுள்ளது. (ம-175)

# வெற்றிடம் நிரப்பு பட்டியல் மூலம் விவசாயபீடத்திற்கு 28 பேர்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் மேலும் 28 மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஏ. ஜெயந்தி, ஆர். காயத்திரி. எஸ். குகபிரிகை, ஆர். ரமணன், ஆர். ரேணுகா, எம். தர்சினி, ஏ. ரி. கௌரிபாகன், எஸ். ஜெரோம், கே மயூரன், என். நந்தகோபன், எஸ். பிரதீபன், ரி. விஷ்வதீதன், பி. கஜேந்திரன், எஸ். பிரசாத், எஸ். வைதேகி, எஸ். வினோதா, கே, ஜெகஜீவகன், ஜீ. நிரஞ்சன், எஸ். கஜீலன், என். கமலராஜ்.

எஸ். செந்தூரன், ஆர். வனிதா, ஈ. தர்சினி. என். சசிறேகா, எம். பிரிந்தினி, எஸ். காயத்திரி. என். ஜே. கியூ. தர்சனோதயன், பி. ஊர்மிலா.

இந்த மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொண்டபின் வகுப்புகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-6)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 11 — 08 — 1933

ஆண்டவன் அடியில் 02 12 1997

## அமரர் சந்தியாப்பிள்ளை திபூசியஸ்

( B. Sc. Dip in Ed, B, Sc. Lond )

பட்டங்கள் பல பெற்று
பள்ளிகள் பல கண்டு
நாடுகள் பல வலம் வந்து
நற்கல்விதனை பலருக்கும் அளித்து
இறுதியில்
உன நாடு திரும்பி
உன் சகோதரி நிழலிற் தங்கி
உன் வாழ்க்கை ஓட்டம்தனை முடித்து
மறுமைக்குள் பிரவேசித்த
உம்மை இந்நாளில் நினைக்கின்றோம்
தேவரீருடைய காலடியில்
நித்தியத்துக்கும் களிகூர்ந்திருக்க வேண்டுகிறோம்

சி. சிவபாதம் [ஜோர்ஜ்]
(மருமகன்).

''டொறனி வாசா'',
பீச் றோட், பருத்தித்துறை. (81148)

# பிரபாகரனைக் கைது செய்து இந்தியா கொண்டுவர முயற்சி

## நாடாளுமன்றில் அத்வானி அறிவிப்பு

புதுடில்லி, டிசெம்பர் 2

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகின்றது.


இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி இவ்வாறு தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆராய்வதற்காக பல்முனை கண்காணிப்புக் குழு அதிகாரிகள் அண்மையில் கொழும்பு சென்று திரும்பி உள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்திய ஜெயின் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே இந்தப் பல்முனை கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது.

கொழும்பு சென்ற இக் குழுவின் அதிகாரிகள்



கொழும்பில் உள்ள சட்டத்துறை அதிகாரிகளுடனும் ஏனைய அதிகாரிகளுடனும் வே. பிரபாகரனைக் கைதுசெய்துகொண்டு வருவதற்கான வழிமுறைகள் குறித்து பேச்சு நடத்தினர்.

அதேசமயம் —

தமிழ்நாட்டில் உள்ள விடுதலைப்புலி ஆதரவாளர்களை மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. தமிழ்நாட்டு கரையோரப் பகுதிகளில் புலிகளின் கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புக்களான தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்த் தேசிய மீட்புப்படை போன்ற அமைப்புக்களைத் தடை செய்வது குறித்தும் மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

இப்படி அவர் மேலும் கூறினார். (ம-8)

## லாலுவுக்கு பிணை அனுமதி

பாட்னா, டிசெ. 2

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் பீஹாரின் முன்னாள் முதல்வரும், ராஷ்டிரீயஜனதாதள் தலைவருமான லாலு பிரசாத் யாதவுக்கு பாட்னா சிறப்பு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிவரை இந்தப் பிணை அனுமதி செல்லுபடியாகும் என்று நீதிபதி தெரிவித்துள்ளார். (ஒ)

## மண்டேலாவுக்கு காந்தி விருது

தென்ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கும், பங்களாதேஷ் கிராமிய வங்கிக்கும் இந்திய அரசின் இந்த ஆண்க்குகான காந்தி சமாதான விருது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அகிம்சை வழியில் பணியாற்றிவரும் மண்டேலாவும் உத்தரவாதம் எதுவும் பெறாது நம்பிக்கையின் அடிப்படையில் கடன் வழங்கும் கிராமிய வங்கிக்கும் பரிசுத் தொகையான ஒரு கோடி ரூபா பகிர்ந்து வழங்கப்பட உள்ளது.

# ஈராக்கில் ஆயுதக் கண்காணிப்பை மீண்டும் தொடங்க ஐ. நா. திட்டம்

நியூயோர்க், டிசெ. 2

ஈராக்கில் அணு மற்றும் இரசாயன ஆயுதங்களை தேடிக்கண்டுபிடிக்கும் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஈராக் அதிகாரிகளுடன் விரைவில் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளதாக ஐ. நாவின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

குவைத்தை ஆக்கிரமிக்க ஈராக் முயன்றதை அடுத்து நடந்த வளைகுடாப் போரின் பின்னர், இரசாயன, அணு ஆயுதங்களையும், அவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் கண்டுபிடித்து அழிக்கும் பணியில் ஐ. நா. கண்காணிப்புக்குழு ஈடுபட்டு வந்தது.

இரண்டு வருடங்களின் முன்னர் ஐ. நா கண்காணிப்புக் குழுவுக்கு ஈராக்தடை விதித்திருந்தது.

இந்த நிலையில் ஆயுதக் கண்காணிப்பை நடத்தி முடித்து, ஈராக் மீதான தடைகளை நீக்க ஐ. நா திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. கடந்தவாரம் ரஷ்யா சென்றிருந்த ஈராக் துணைப் பிரதமர் தாரீக் அசீஸ் ஐ.நாவுடன் ஒத்துழைக்கத் தமது நாடு தயாராக உள்ளதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகானோ இவானோவிடம் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள ஐ. நா. அதிகாரி ஒருவர் கோபி அனானின் முயற்சி

உலக அரங்கில்

வெற்றியடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சமீபகாலமாக ஐ. நாவின் தடைகளை உதாசீனப்படுத்தி பிரான்ஸ், ரஷ்யா உட்பட பல நாடுகள் ஈராக்குடன் விமானசேவை உள்ளிட்ட தொடர்புகளைப்பலப்படுத்தி வருவதாலேயே கோபி அனான் இந்த முடிவை எடுத்திருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்

(ஒ-8)

## ஆப்கானிஸ்தானின் தலிபான் மீது ஆயுதத்தடை விதிக்க ஐ. நா. முடிவு

நியூயோர்க், டிசெ. 2

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அரசுக்கு எதிராக ஆயுதத்தடையை விதிக்கவுள்ளதாக ஐ. நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு தலிபான் அரசு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவைத் தடுக்கவும்-சர்வதேசத் தீவிரவாதியான ஒஸாமா பின் லேடனை அமெரிக்கர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் குறித்து விசாரிக்க அமெரிக்காவிடம் ஒப்படைக்குமாறு தலிபானை வற்புறுத்தவும்—

இந்தத் தடை விதிக்கப்பட உள்ளதாக ஐ. நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையால் இந்த வாரம் அமுல் படுத்தப்பட உள்ள ஆப்கானிஸ்தான் மீதான ஆயுதத் தடை விதிப்பிற்கு அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவும் ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தடை அமுலாக்கப்பட்டால் ஆப்கானிஸ்தானுக்கு பிற நாடுகள் ஆயுதங்கள் விநியோகிப்பது முற்றாக நிறுத்தப்படும்.

தற்போது தலிபான்களுக்கு பாகிஸ்தான் அதிகளவில் ஆயுதங்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ—8)

## உலக அழகி பிரியங்கா

இந்தியாவைச் சேர்ந்த பிரியங்கா சோப்ரா (வயது 18) உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை லண்டனில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தன்னுடன் போட்டியிட்ட 94 அழகிகளை இவர் வென்றுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த ஐவர் இதுவரை உலக அழகிகளாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் நாடாளுமன்றம் கலைப்பு

டெல்அவிவ், டிசெ. 2

இஸ்ரேலிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு தமது கட்சியினர் முழு ஆதரவு வழங்கியதாக பிரதமர் எகுட் பராக் தெரிவித்துள்ளார்.

ஆனால், பிரதான எதிர்க்கட்சியான லிகுட் கட்சியினர் நாடாளுமன்றத்தில் கொண்டுவர இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க முடியாத நிலை ஏற்பட்டதாலேயே பராக் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை எடுத்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(ஒ)


## துயர் பகிர்வு

எமது பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு. சுப்பையா சுந்தரலிங்கம்
அவர்களின் அன்புச் சகோதரி

### திருமதி செல்லத்துரை தங்கரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்க உறுப்பினர்கள்.

பிரதேச செயலகம்,
வேலணை.

(சி/14102)

## கண்ணீர் அஞ்சலி

நீண்டகாலமாக நாட்டுக்கூத்துத் துறையில்
தன்னை அர்ப்பணித்துச்
செயற்பட்டதுடன்,
பல மாணவர்களையும் உருவாக்கிய
அண்ணாவியார்

### ஆனாசி அருளப்பு

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி/14101)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். நடேஸ்வராக் கல்லூரியின்
1996 ஆம் ஆண்டு முதல் கணித பாட ஆசிரியர்
குறையினை நிவர்த்தி செய்த கணித பாட ஆசிரியரும்
எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க
நிர்வாக சபை உறுப்பினருமாகிய

திரு. வி. லோகேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் முருகேசு விசுவலிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா / நடேஸ்வராக் கல்லூரி,
காங்கேசன்துறை.

(சி/14099)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் நடேசு

ஆனந்தா வீதி, மானிப்பாயைச் சேர்ந்த இராமலிங்கம் நடேசு அவர்கள் காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், ஜெயஒளிபவன் (இந்தியா), சசிலா, லதாரூபன் ஆகியோரின் தகப்பனாரும், ஜெகநாதனின் மாமனாரும், இராசதுரை, மாசிலாமணி, அற்புதம் ஆகியோரின் மைத்துனரும், கந்தையா, சின்னத்துரை, காலஞ்சென்ற இளையதம்பி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2-12-2000) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. ஜெகநாதன்
(மருமகன்)

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

(81161)

வெளி வந்துள்ளது!

ஆங்கில மொழியில்!

## 125-மாதிரிக் கட்டுரைகள்-125

★ பல வகையானவை
★ உயர்கல்வி மாணவர்களுக்குரியது.
★ ரூபா 130/-
★ ஆக்கியோன் த. ந. பஞ்சாட்சரம்

நியூ சயன்ஸ் கல்வி நிலையத்திலும் யாழ். நகர் முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும்.

(81093)

## உரிமை கோரப்படாத மாடுகள்

புத்தூர் கமநல கேந்திர பிரிவுக்குட்பட்ட வயல் பிரதேசங்களில் கட்டாக் காலிகளாகப் பிடிக்கப்பட்ட மாடுகள் உரிமை கோரப்படாமல் உள்ளன. மாடுகளின் உரிமையாளர்கள் மூன்று நாள்களினுள் தகுந்த ஆதாரத்துடன் புத்தூர் கமநல கேந்திர நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கம நல கேந்திர நிலையம்,
புத்தூர்.

(81099)

## யாழ். வண். நாவலர் மகா வித்தியாலய

முன்னாள் அதிபர்

அமரர்

## ஐயாத்துரை துரைராஜா

அவர்களின்

## நினைவஞ்சலிக் கூட்டம்

காலம்: நாளை (03-12-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி (இ. நே.)

இடம்: யா/ வண். நாவலர் மகா வித்தியாலய பிரார்த்தனை மண்டபம்

தலைமை: திரு. ந. சிவராஜா அதிபர்

நிகழ்ச்சிகள்

卐 விசேட பூஜை
卐 திருமுறை ஓதுதல் – செல்வன் ச. விமலசேகர்
卐 மௌனப் பிரார்த்தனை
卐 அமரர் ஐ. துரைராஜா அவர்களின் உருவப் படம் திரைநீக்கம் செய்தல்
சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்
(உறுப்பினர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபை)
卐 பிரார்த்தனையுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
卐 தலைமையுரை
卐 அஞ்சலியுரைகள்
✠ கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)
✠ பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் (தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)
✠ ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் (உறுப்பினர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபை)
✠ திரு. ஆ. இராஜகோபால் அவர்கள் (உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ். கோட்டக்கல்வி அலுவலகம்)
✠ திரு. த. அருணகிரிராஜா அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி)
✠ திருமதி க. பொன்னம்பலம் அவர்கள் (அதிபர், யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தலைவர், யாழ். கோட்ட அதிபர் சங்கம்)
✠ திரு. த. பஞ்சலிங்கம் அவர்கள் (துணைப் பொதுச் செயலாளர், இ. த. ஆ. சங்கம்)
✠ திரு. அ. சேனாதிராஜா (செயலாளர், சைவ பரிபாலன சபை)
✠ திரு என். எஸ். ஜீவரட்ணம் (உறுப்பினர், பா. அ. ச.)
✠ திரு. இரா. செல்வவடிவேல் (உபதலைவர், பழைய மாணவர் சங்கம்)
✠ செல்வி ஜீ. டிலானி பவித்திரா (பழைய மாணவி)
✠ செல்வி க. வினோதினி (மாணவி)
✠ நன்றியுரை திரு. வி. தயாபரன் (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
✠ பாடசாலைக் கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யாழ். வண். நாவலர் மகா வித்தியாலயம்.

(81035)

## ஊக்குவிப்பு

வலி. வடக்கு, டிசெ. 2

இடம் பெயர்ந்த மக்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் வறுமை, பட்டினிக்கு எதிரான இயக்கம் ஈடுபட்டுள்ளது.

கடந்த கால வன்செயல்களைத் தொடர்ந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் போஷாக்கான உணவைப் பெற்றுக்கொள்ளும் ஒரு முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு வேண்டிய மரக்கறி விதைகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன விநியோகம் செய்யப்படவுள்ளன.

(ம-86)

## இணைந்த கணிதம்

ஆசிரியர்
நா. அம்பி B. Sc.
A/L 2001 DAY
துரித மீட்டல் வகுப்பு
திங்கள், செவ், வியாழன்
காலை 7.30 - 9.30 Am.
ஆரம்பம்
4 – 12 – 2000

[ 2002 A/L ]
காவிகள்
திங்கள், செவ்.
6.30 — 7.30 A m.

[ 2001 A/L ]
★ சட்டப்படல்
★ நேர்கோடு
திங்கள் — 4.30 P.m.
செவ், வெள்ளி-3.30 P.m.

இணுவில்
பொருளியற் கல்லூரி
K. K. S. வீதி,
இணுவிலில்.

(81102)

## MATHS CENTRE

M M.V. Road — Nelliady

A/L 2001 DAY CLASS
(கலை — வர்த்தகம்)
ஆரம்பம்:-11-12-2 K திங்கள் A.M.6.30 ப.நே
விவரங்கட்கு நேரில் தொடர்பு கொள்க.

(81032)

## வேலணை பிரதேச சபை
## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப்
## பதிவு செய்தல் - 2001

வேலணை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100/- உம், மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10 000/- மும் செலுத்துவதன் பேரில் இச் சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

01) ரூபா 500 000/- இதற்கான சொத்துக்களின் சான்றிதழ்.
02) வியாபாரச் சான்றிதழ்
03) இக்ராட் பதிவுச் சான்றிதழ்
04) பொருள்கள். சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்
05) தொழில்நுட்ப தகுதிச் சான்றிதழ்
வீதி அபிவிருத்தி அதிகார சபை/ வீதி அபிவிருத்தி திணைக்களம்/ கட்டட நிர்மாணத் திணைக்களம்
06) கிராம அபிவிருத்தி சங்கம்
07) சபையுடன் ஏற்கனவே பதிவு செய்த ஒப்பந்தகாரர்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர்களிற்கு மட்டும் 2001 ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

பதிவுகள் யாவும் 15-12-2000 ஆம் திகதி 12. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே.பி.யு.எம்)
தலைவர்
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை.

(சி/14080)

## யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி

## வருடாந்த பரிசளிப்பு விழா-2000

இடம்: பாடசாலை திறந்தவெளி அரங்கு
காலம்: 02–12–2000 சனிக்கிழமை பி.ப. 1.30 மணி
தலைவர்: திரு. சி. சிற்றம்பலம் (அதிபர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரச அதிபரும், வடக்கு—கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளரும் — யாழ். மாவட்டம்)

க. பொ. த (உ/த) — 1998 பரீட்சைக்கு எமது பாடசாலையிலிருந்து தோற்றி பல்கலைக்கழகத்துக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு பின்வருவோர் நினைவாக புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

| கற்கை நெறிகள் | நினைவுக்குரியவர் பெயர் | வழங்குபவர் பெயர் | பரிசில் பெறுபவர் |
|---|---|---|---|
| [பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக வழங்கப்படுபவை] | | | |
| மருத்துவம் | திருமதி பரஞ்சோதி பாஸ்கரன் | திரு. ந பாஸ்கரன் (கொழும்பு) | செல்வி த. சண்முகப்பிரியா |
| [பழைய மாணவர் சங்கம் சார்பாக வழங்கப்படுபவை] | | | |
| 1. பொறியியல் | திருமதி பாக்கியம் ஐயாத்துரை | திரு இ ஐயாத்துரை (அரசாங்க அதிபர் இ. கிளிநொச்சி) | செல்வன் இராகுலன் |
| 2. கலை | திரு. இராமநாதன் பஞ்சாட்சரம் | திரு ப. தயாபரன் (சிவசக்தி இரும்பகம்) | செல்வன் வே. ஞானசப்பந்தன் |
| 3. வர்த்தகம் | திருமதி செல்வரட்ணம் ஐயாத்துரை | திரு.க. சிவநாதன் (மருதம் இரும்பகம்) | செல்வன் இ இளங்கீரன் |
| 4, பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப் படுவோர் | — | திரு. சு. சண்முகசுந்தரம் (செல்லமுத்தூஸ்) | 13 பேர் |

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(சி/14086)

- பழைய மாணவர் சங்கம்

உ
கீரிமலை

## பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
## பவளவிழா வாழ்த்து

நகுலேஸ்வரத்தின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும், எதிர்காலத்தின் சிறப்பையும் உணர்த்திப் புலம்பெயர்ந்த நகுலேஸ்வர பக்தர்கள் வாழுகின்ற நாடெல்லாம் வந்து, நல்லாசி வழங்கி, எல்லோரையும் வாழ்விக்கும் பெருபகாரியாகத் திகழ்கின்றவர் குருக்கள் ஐயா,


மீண்டும் நகுலேஸ்வரத்தைப் புதுப்பொலிவுடன் கட்டியெழுப்புவதையே தவமாகக் கொண்ட ஐயா அவர்களுக்கு நகுலேஸ்வரப் பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டுமெனத் தொழுது போற்றுகின்றோம்.

பவள விழா சிறந்து பல்லாண்டு வாழ்க.

பொன்மயிலை நாதன் குடும்பத்தினர்.

சிட்னி, ஆஸ்திரேலியா. (81104)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் 14 — 03 — 1925
செய்வத்துள் 25 — 11 — 1998

### அமரர் சுப்பர் ஐயாத்துரை

திதி: 02-12-2000

அன்பின் பாசத்தாலும் அயராத உழைப்பாலும் எம்மை சிறப்பாக வளர்த்த அன்புத் தெய்வமே! ஆண்டு பல சென்றாலும் ஆறாது உம் நினைவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (80818)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### தவமணி (மாரிஸ்ரெலா) செபஸ்ரியன்

மலர்வு 02 — 05 — 1948
உதிர்வு 02 — 12 — 1995

சீவியத்தில் நேசித்தோரே மரணத்திலும் மறவாதீர்!

யூட்கொணறி,
எதல் கஸ்ரோவின் டானிசியஸ்,
எல்விஸ் கிளமன்ற்,
றெக்ஸ் தமறன்,
செபஸ்ரியன்.

125, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (81067)

## கலைப்பீட மாணவருக்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் பருவகால சீட்டுப் பெறும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களை கலைப்பீட மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர் ஒன்றியத் தலைவர் ரி. பிரபாகரன் கேட்டுள்ளார். [ஐ-72]

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

### தொழிலாளா கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2000/ 2001

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2000. 12. 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவுப் பரீட்சை 23. 12. 2000 இல் நடைபெறும். முன்னர் விண்ணப்பித்தோர் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அனுமதி அட்டையை 20. 12. 2000 இல் தொழிலாளர் கல்வி அலகில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரத்துக்கு இணைப்பாளர், தொழிலாளர் கல்வி அலகில் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
(சி/14065)

## அறிவித்தல்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

### விவசாய விஞ்ஞான கற்கை நெறி 2000 / 2001
### உயிரியல் விஞ்ஞான கற்கை நெறி 2000 / 2001

விவசாய விஞ்ஞான கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியலில் 8 பேர் தெரிவாகியுள்ளனர் இவ் விவரங்களை யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் 01 இல் மேலதிமாக 11 பேர் தெரிவாகியுள்ளனர். இவ் விவரங்களை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டமையால் தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 2000. 12. 20 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்.
(சி/14066)

இதோ!
## விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

பல விதமான நத்தார் – புதுவருட
வாழ்த்து மடல்கள்
மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகட்கு விசேட கழிவு உண்டு.

All Ceylon Distributors,
132, K.K.S. Road, JAFFNA.
(81095)

வலிகாமம்
## வடிசாலை சாராயம் விலை அதிகரிப்பு

வலிகாமம் வடிசாலையில் (நவாலி) உற்பத்தி செய்யப்படும் சாராயங்களின் சில்லறை விலை 01 - 12 - 2000 தொடக்கம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

விகர் சாராயம் (750 மி. லீற்றர்) - ரூபா 215/
பனை விசேடம் சாராயம் (750 மி. லீற்றர்) - ரூபா 225/-
V. S. V. 99 (750 மி. லீற்றர்) - ரூபா 240/-

இவற்றை உத்தரவு பெற்ற சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்,
கொத்தணி (வ / து).
(பதிவு இலக்கம் யா / மா, J / P 2154 - 06 - 11 - 1993)

மானிப்பாய் (சி/14067)

சங்கானைக் கல்விக் கோட்டம்
## சைவத் திருமுறை விழாவும் சைவநெறித் தொண்டுபடு நிகழ்ச்சிப் பரிசளிப்பு வைபவமும்

இடம்:- யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

காலம்:- விக்கிரம வருடம் கார்த்திகைத் திங்கள் 18 ஆம் நாள் (2000-12-03) ஞாயிற்றுக்கிழமை காலை 7-30மணி

தலைவர்:- திரு. சி. செல்லையா அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்விக் கோட்டம், சங்கானை)

### நிகழ்ச்சி நிரல்

★ காலை 7-30 மணி
ஆலயத்தில் இருந்து திருமுறைச் சுவடிகள் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்து வரப்படல்

★ வரவேற்பு நடனம்:-
யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

★ வரவேற்புரை:-
திருமதி கோ அம்பலவாணர் அவர்கள்
(அதிபர் யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

★ ஆசியுரை:-
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள்
(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)

★ தலைமையுரை:-
திரு சி. செல்லையா அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்விக் கோட்டம், சங்கானை)

★ சிறப்புரைகள்:-
திரு வி. இராசையா அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
திரு ப. விக்கினேஸ்வரன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், தீவக கல்வி வலயம்)
திரு ந. திரிலோகநாதன் J P U.M. அவர்கள்
(தலைவர், பிரதேச சபை வலி.மேற்கு)
திரு நா வேதநாயகன் அவர்கள்
(பிரதேச செயலர், வலி மேற்கு சங்கானை)
திரு. கா சந்திரராசா அவர்கள்
(இணைப்பாளர் UNHCR, யாழ் செயலகம்)
பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்கள்
(தலைவர், வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம்)
திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்)
திரு ஆறு. திருமுருகன் அவர்கள்
(ஆசிரியர், யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

★ பரிசில் வழங்கல்

★ நன்றியுரை:- திரு. ம. மகாதேவா அவர்கள்
(அதிபர், யா/ அராலி இந்துக் கல்லூரி)

★ இறை வணக்கம்

வாழ்த்துவோர்.-
## சச்சியா இரும்பகம்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
(81087)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் குறைபாடுகளைத் தீர்க்க உறுதி

## ஈ.பி.டி.பியுடனான நேற்றைய சந்திப்பின் போது

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் உறுதியளித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என்.கனகரத்தினம், டாக்டர் எஸ்பவானி, டாக்டர் தயாளன் அம்பலவாணர், டாக்டர் குணாநந்தன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களான எஸ்.பத்மநாதன், எஸ்.நாகலிங்கம் ஆகியோர டங்கிய குழு ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரனை அவரது அலுவலகத்தில் சந்தித்து போதனா வைத்தியசாலையின் குறைபாடுகளைத் தெரிவித்தது.

இச்சந்திப்பின் போது ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தாவுடன் தொலைபேசி மூலம் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் தமது குறைபாடுகளைத் தெரிவிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரின் குறைகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே. குகேந்திரனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கீழ்வரும் உறுதிமொழிகளை அவர்களிடம் தெரிவித்தனர்.

✪ யாழ்.போதனா வைத்தியசாலையில் 40 சடலங்களை வைக்கக் கூடிய பிரேத அறையினை அமைப்பதற்கு வடக்கின் மீள் குடியமர்வு அதிகார சபையின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

✪ யாழ். போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

✪ தெல்லிப்பழை புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்குரிய வீதியை அமைப்பதற்கும் இந்த நிலையத்திற்குரிய மின்சார இணைப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பான 3 மாத, 6 மாத, ஒரு வருடத்துக்குரிய வேலைத்திட்டங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும் ஆஸ்பத்திரி [illegible] னரை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

(இ-5-6)

# அஞ்சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

## மாணவர்களுக்கு உடன் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களில் இது வரை அஞ்சல் அறிமுக அடையாள அட்டையைப் பெற விண்ணப்பிக்காதவர்கள் தமது பகுதி அஞ்சல் அதிபர்களுக் கூடாக விண்ணப்பித்தால் உடனடியாக அஞ்சல் அறிமுக அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு பிரதேச தபால் திணைக்கள உத்தியோகத்தர் எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பாடசாலைப் பரீட்சார்த்திகளும் இதுவரை அஞ்சல் அறிமுக அட்டையைப் பெறவில்லை எனின் அஞ்சல் அதிபர்களுடன் தொடர்புகொண்டால் உடனடியாக அடையாள அட்டையைப் பெறுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை -

நடமாடும் அஞ்சல் சேவையின் மூலம் எதிர்வரும் 4ஆம் திகதி விக்ரோறியாக் கல்லூரி மாணவருக்கும், 5ஆம் திகதி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவர்களுக்கும் அஞ்சல் அறிமுக அட்டை வழங்கப்பட உள்ளது.

பாடசாலைகளில் இருந்து 15 இற்கும் குறைவான மாணவர்கள் அஞ்சல் அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்தால் -

விசேட திட்டத்தின் கீழ் அந்தப் பகுதி அஞ்சல் அதிபர்கள் அப் பாடசாலைகளுக்குச் சென்று விண்ணப்பங்களைச் சேகரித்து அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கும் உடனடியாக அஞ்சல் அறிமுக அட்டைகள் விநியோகிக்கப்படும். நடமாடும் சேவை மூலம் அஞ்சல் அறிமுக அட்டைகளை வழங்கும் பணியை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டி இருப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-6)

## செயலமர்வு

தென்மராட்சி,டிசெ.2

ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான பாட விசேட செயற்றிட்டத்தினது இறுதிச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இந்த செயற்றிட்ட வகுப்புக்களில் கலந்துகொண்ட அனைத்து போதனாசிரியர்களும் இது வரை நடைபெற்ற அனைத்து மதிப்பீடுகளின் புள்ளிகளையும் செயலமர்வுக்கு கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

# கூட்டணி எம்.பிக்கள் மூவரும் நேற்று போதனா வைத்தியசாலை விஜயம்

## பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்தனர்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதார சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை 3 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சி.சிவமகாராசா ஆகியோர் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் செல்வி என்.கனகரத்தினம் மற்றும் வைத்தியசாலை டாக்டர்கள் போன்றோரைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினார்கள்.

இக் கலந்துரையாடல் வைத்தியசாலைப் பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை மற்றும் கொழும்பிலிருந்து மருந்துப் பொருள்களைக் கொண்டு வருவதில் உள்ள காலதாமதம் போன்றவை உட்பட பல விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது குறித்து அமைச்சு மட்டத்தில் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (இ-5-6)

### இனப்பிரச்சினைத் தீர்வில்

# முஸ்லிம்களின் நலன் குறித்து லண்டன் மாநாட்டில் ஆராய்வு

லண்டன்,டிசெ.2

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளில் முஸ்லிம்களின் நலன்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது குறித்து வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களின் ஒன்றியம் கடந்த 26 ஆம் திகதி லண்டனில் கூடிப் பேச்சு நடத்தியது.

இலங்கையின் சிறுபான்மை இனம் என்ற வகையில் தாமும் பெரிதளவு பாதிக்கப்பட்டது குறித்தும்-

நோர்வேயின் சமாதான முயற்சிகளில் தமது நலனும் கருத்தில் கொள்ளப்படவேண்டிய அவசியம் குறித்தும் - கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பிரஸ்தாபித்தனர்.

சமாதானப் பேச்சுக்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வலியுறுத்துவதற்காக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

❖ முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய இனம் என்பதைப் பேச்சுக்களில் சம்பந்தப்பட்ட சகல தரப்பும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

❖ இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் தேசம் என்பது அங்கீகரிக்கப்படவேண்டும்.

❖ வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் சமூக, சமய, கலாசார, அரசியல், பொருளாதார, நில உரிமைகளும், இழந்த பிரதேசங்களை மீள வழங்குதல், மீளக்குடியமர்த்தல் ஆகியவையும் பேச்சுக்களில் கலந்துகொள்வோரால் உறுதி செய்யப்படவேண்டும்.

❖ அதிகாரப் பகிர்வில் நீதியும் சமத்துவமும் முஸ்லிம்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

(இ-8)

# உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீண்டும் உயர் கல்வி அமைச்சின் கீழ்

யாழ்ப்பாணம்,டிசெ.2

உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீண்டும் உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களை அண்மையில் கல்வி அமைச்சின் கீழ்க் கொண்டு வந்துள்ளதாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் அதனை உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்தினர்.

மாணவரது போராட்டத்தைத் தொடர்ந்து நவம்பர் மாதம் 8 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீண்டும் அவை உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் ரி.ராஜரட்ணம் தெரிவித்தார்.

(ம-6-5)


CERTIFICATE IN VISUAL BASIC (6.0)

TRRO CTC

பிரத்தியேக குழுக்களாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.
இக் கற்கைநெறியானது
❊ Introduction to Visual Basic
❊ Manage Other Application In Visual Basic
❊ Object Oriented Programming in VB
❊ Project Works
போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும்.
ஆரம்பம்: 09.12.2000

Director:
TRRO Computer Training Center
மருதனார்மடச் சந்தி. (இராமநாதன் கல்லூரி முன்பாக)
மானிப்பாய் வீதி, உரும்பிராய்.
(C/14100)

விற்பனைக்கு

எம்மிடம்
❊ செப்ரெம்பர் ❊ ஒக்ரோபர் ❊ நவம்பர்
ஆகிய மாதங்களின் மாதாந்த சஞ்சிகை கொம்பியூட்டர் ருடே (Computer Today) விற்பனைக்குண்டு.
ஏக விநியோகஸ்தர்:-
ராஜா குறோசறீஸ்
பஸ் தரிப்பிடம் முன்பாக, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். T.P. : 2847
(81151)


## மரண அறிவித்தல்

### திருமதி மூத்தபிள்ளை நாகரத்தினம்

மகாதனை தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் கோண்டாவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மூத்தபிள்ளை நாகரத்தினம் அவர்கள் நேற்று (01.12.2000) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், பரிபூரணம் (மலேசியா), சுந்தரலிங்கம் (முல்லாவி), சண்முகலிங்கம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் - பரீட்சைகள திணைக்களம்), புவனேஸ்வரி, பரமேஸ்வரி (விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய கலாசாலை), சிவலிங்கம் (**FORUT** - வவுனியா, இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, கமலாதேவி, சுவர்ணா (இளைப்பாறிய தட்டெழுத்தாளர், தொழில்துறை - கொழும்பு), நடராசா, கலாவதி (உதவி முகாமையாளர், மக்கள்வங்கி - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2000) சனிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**நா.சிவலிங்கம்** (மகன்)
**நா.பரமேஸ்வரி** (மகள்)
**சு.கல்பனா** (பேரப்பிள்ளை, நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தற்காலிக முகவரி:-
*முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

(C/14103)


பொருளியற் கல்லூரி
(கிளை நிறுவனம்)
K.K.S. வீதி - இணுவில்.
A/L 2001 DAY CLASS
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 04-12-2000
திங்கள் - 8.00 a.m.
கலைப்பிரிவு
ஆரம்பம் : 04-12-2000
பிரிவு I
திங்கள் - 7.00 a.m.
பிரிவு II
திங்கள் - 9.00 a.m
(81011)

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
A/L 2001 DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆசிரியர் குழு:
தமிழ் - V.M.லிங்கம் பொருளியல் - S.ஜெயக்குமார்
இ.நாகரிகம் - T.ஸ்ரீஸ் கணக்கீடு - S.நித்தி
அளவையியல் - E.S.பவன் வணிகக்கல்வி - N.நந்தீஸ்
ஆரம்பம் : 2000.12.04 திங்கள் காலை 8.00மணி
2000 A/L பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எமது நிறுவன மாணவர்களை வாழ்த்துகின்றோம்.
- நிர்வாகி.
(C/14083)

கணக்கீடு
A/L 2001 DAY CLASS
ஆரம்பம் : 03.12.2K
9.00 a.m.
அலகு ரீதியான மீட்டல்
ஆசிரியர்:
திரு.S.தவா
(B.com. (Hons)(Acc.Spl.))
வாணி கல்வி நிலையம்
சுன்னாகம். (81006)

# மாகாணக் கல்விச் செயலர் தலைமையிலான குழு வன்னிக்கு

வவுனியா,டிசெ.2

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழு ஒன்று நாளை மறுதினம் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு செல்கிறது.

அங்குள்ள மாணவர்களின் கல்வி நிலை, ஆசிரியர்கள் பிரச்சினை ஆகியன தொடர்பாக இக் குழு அங்கு ஆராயவிருக்கிறது. (இ-3)

## மினிபஸ் சாரதிக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.2

மினிபஸ் சாரதி ஒருவருக்கு எதிராக வலி.மேற்குப் பிரதேசசபையின் தலைவர் ந.திரிலோகநாதன் மல்லாகம் மாவட்ட நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சங்கானை பஸ் நிலையத்தின் சுற்றுப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த தூண் ஒன்றை மினிபஸ்ஸினால் மோதி பலத்த சேதத்துக்கு உள்ளாக்கியதாகத் தெரிவித்தே சம்பந்தப்பட்ட மினிபஸ்ஸின் சாரதிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்களை இத்தாலியப் பொலீஸாரின் பாதுகாப்புடன் இலங்கைக்கு அனுப்பப்போவதாகவும் -

இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு இவர்கள் குறித்து பேசப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அடுத்த வாரம் நேரில் சந்தித்து, அவர்கள் இலங்கையர்களா என்பதை உறுதிசெய்து கொள்வார்கள் எனவும் கூறப்பட்டது.

கைதானவர்களில் பெரும்பான்மையோர் சிங்களவர் என தெரிவிக்கப்பட்டது. (இ-8)

## ஆயுதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் புலோப்பளையில் கடற்புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தி அதை அழித்து விட்டதாகவும தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 9 உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது.(இ-3)

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பொருட்டு இவரது இரத்தத்தை டெங்குக் காய்ச்சலைக் கண்டுபிடிக்கும் பரிசோதனைக்காக அவசர அவசரமாகக் கொழும்புக்கு அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குருநகரைச் சேர்ந்த ரங்கலிதாஸ் றெபோஜியஸ் (வயது 11) என்ற சிறுவனே இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இவருக்கு ஏற்பட்டுள்ளது டெங்குக் காய்ச்சல் அதிகரித்த நிலையான "ஹெமோரேஜிக் டெங்கு" **(HAEMORRHAGIC DENGU)** எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவருக்கு குருதிப் பெருக்குடனான காய்ச்சல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ-8)

## 6 நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும்-

தற்போது அவர்கள் வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும்- கல்குடா மீனவர் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## கப்பலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவர்களும் கட்டுக்கடங்காத நிலையில் நடந்து கொண்டதே பயணிகளை பஸ்களில் ஏற்றி அனுப்பும் நடவடிக்கை தாமதம் அடைந்து கப்பலைத் தவறவிடும் நிலைமை ஏற்பட்டது என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையின் யாழ். மாவட்ட இணைப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

நண்பகல் ஒரு மணிக்கு கப்பல் புறப்பட இருப்பதால் அதற்கு முன்பாகப் பயணிகளை காங்கேசன்துறைக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதன்படி யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மணிக்கு முன்னர் காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஐந்து பஸ்கள் நிறைந்த பயணிகள் மட்டுமே கப்பலில் செல்ல முடிந்தது.

அதன் பின்னர் ஐந்து பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள் இடைவழியில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அதேசமயம் நேற்றுப் பயணம் செய்ய ரிக்கட் பெற்று பயணம் செய்ய முடியாது போனவர்கள் அடுத்த கப்பலில் செல்ல முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சேவைக்கான பயணச் சீட்டுக்கள் ஓரிரு தினங்களில் வழங்கப்படவிருக்கின்றன. (இ-3-5-6-173)

## 125 நிலைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 வயதுக்கு உட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளதால் பெற்றோர்கள் தமது குழந்தைகளை தமக்கு அருகிலுள்ள நிலையங்களுக்கு அழைத்துச்சென்று போலியோ மருந்தினை வழங்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உ.சிவபாதசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5-6-15-135)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ அதில் அடங்கியுள்ள விடயங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

லண்டனில் தங்கியுள்ள ஜனாதிபதி அந்தரங்கமான முறையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபட்டது.

கடந்த சனிக்கிழமை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருடன் ஜனாதிபதி நட்பு ரீதியில் கலந்துரையாடினார் என்றும் - அப்பொழுது இலங்கை இனப்பிரச்சினை குறித்துப் பேசப்பட்டது என்றும் - செய்திகள் வெளியாகியிருந்தன.

உத்தியோகபூர்வமாக இருவரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றனர் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

அவரைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கவிருக்கின்றார்.

அவரது நிகழ்ச்சிநிரல் தொடர்பான விவரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லையெனச் சொல்லப்பட்டது. (இ-3)

## மாவீரர்தின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய நிகழ்வு முக்கியத்துவம் பெறுவதாகக் கருதப்படுகின்றது.

இன்றைய கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முக்கிய உரை நிகழ்த்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3)

## யுத்தநிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே அரசுடன் சந்திரிகாவின் அரசாங்கமே பேச்சுக்களை ஆரம்பத்தது. நோர்வேப் பிரதிநிதிகள் பிரபாகரனைச் சந்திக்க வழி சமைத்துக் கொடுத்ததும் சந்திரிகாவின் அரசுதான்.

தற்பொழுது பிரபாகரன் சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க தனது நேசக்கரத்தை நீட்டியுள்ளார். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்த வேண்டும்.

வெளிநாட்டில் தற்சமயம் தங்கியுள்ள ஜனாதிபதி பிரபாகரனின் அழைப்புக்குப் பதில் அளிக்க வேணடும். அவ்வாறு செய்யாது விட்டால், சமாதானத்தை விரும்பும் தமக்கு அரசு பதில் அளிக்கவில்லை என்று பிரபாகரன் உலக நாடுகளுக்குத் தெரிவிக்கலாம்.

இந்த விடயத்தில் அரசு மௌனமாக இருக்காமல், தமது நிலைப்பாட்டை மக்களுக்கும், நாட்டுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

யுத்தத்தைப் படிப்படியாகக் குறைத்து பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். மகாசங்கத்தினரையும், எதிர்க்கட்சியினரையும் குறைகூறிப் பயன் இல்லை - என்றார். (இ-3-186)


வண்ணக்கலரில் பிரபாவின் முழுப்பக்க முகப்புப் படத்துடன்

யாழ்ப்பாணம் வந்து விட்டது

சுடர் ஒளி

இந்த வாரத்து டிசம்பர் 3 இதழ்



பிரபா உண்மையில் பேச விரும்புகிறாரா? அரசுக்குப் பொறி வைக்கிறாரா?

★ செய்மதி தொலைபேசி மூலம் சந்திரிகா— பிரபா பேச்சுக்கு லண்டனில் முயற்சி

★ பொலிஸாருக்கு எவ்வளவு கொழுப்பு?

★ மலையகத்தில் புலி என்று கிலி மாகாணசபையில் எதிரொலி!

★ சுவிஸ் தமிழர்கள் இந்தியாவில் நடிகையிடம் கரைத்த காசு!

கண்கவர் வண்ணக் கலவையில் சுவையான மற்றும் பல அம்சங்கள்

- கவர்ச்சியான படங்களுடன் சுடச்சுட சினிமா
- மசாலா மிக்ஸ்
- கேள்வி — பதில்
- பெண்கள் ஸ்பெஷல்
- கலை அமுதம்
- வடபுல நிகழ்வுகள்
- தேரடி அரட்டை
- தலைநகர அவலம்

பார்வைக்கு அழகு— வாசிக்க இனிக்கும்—யோசிக்க வைக்கும்— அதுதான் சுடர்ஒளி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-12-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.